திருப்புகழமிர்தம்



ஆசிரியர்

கிருபானந்தவாரி

பரிதாபி ஐப்பசி

முருகா

காங்கேயநல்லூர்

ஸ்ரீ முருகப் பெருமான் திருவாலயத்தில்

ஸ்கந்த ஷஷ்டி இலக்ஷார்ச்சனை

7-11-72 செவ்வாய்க்கிழமை முதல்
12-11-72 ஞாயிற்றுக்கிழமை வரை.

திருமுருக கிருபானந்தசுவாமிகள் அவர்கள்

முன்னிலையில்

ஆகம விதிப்படி ஆறுசிவாச்சாரியர்களைக் கொண்டு ஆறுவித மலர்களால் ஸஹஸ்ரநாம அர்ச்சனை சிறப்பாக நடைபெறும். அன்பர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறோம்.

அருச்சனை ஒன்றுக்கு ரூ. 10.00—மணியார்டர் மூலம் பணம் அனுப்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும்.

நிர்வாக தர்மகர்த்தா,
ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோவில்
காங்கேயநல்லூர் P. O. (வழி) வேலூர்-6. N. A.

நேரில் செலுத்த விரும்புவோர் மேலே குறிப்பிட்டுள்ள விலாசம் தவிர, பின் வரும் விலாசத்திலும் 5-11-72 மாலைக்குள் செலுத்தலாம்

திருப்புகழமிர்தம் காரியாலயம்
89, சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2.

திருப்புகழமிர்தம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சித்திரை, ஆடி, ஐப்பசி, தை மாதங்களில் வெளிவரும்.

ஆண்டுச் சந்தா

இந்தியா	ரூ.	4-00
மற்ற நாடுகள்	ரூ.	7-00

மானேஜர், திருப்புகழமிர்தம் காரியாலயம்,
89, சிங்கண்ண செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

ஆசிரியர் விரிவுரை

ஸ்கந்த ஷஷ்டி விழாவை முன்னிட்டு வேலூர் (N. A.) ஷண்முக னடியார் சங்கத்தில் 7-11-72 முதல் 13-11-72 முடிய நாள் தோறும் திருமுருக கிருபானந்தவாரியாரவர்களால் விரிவுரைகள் நிகழும். அன்பர்கள் கேட்டு இன்புறலாம்.

உ

முருகா



திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 37	பரிதாபிஞூ—ஐப்பசிமீ அக்டோபர், 1972	இதழ் 3

திருப்புகழ்

சிதம்பரம்

கதித்துப்பொங் கலுக்கொத்துப்
பணைத்துக்கொம் பெனத்தெற்றிக்
கவித்துச்செம் பொனைத்துற்றுக் குழலார்பின்
கழுத்தைப்பண் புறக்கட்டிச்
சிரித்துத்தொங் கலைப்பற்றிக்
கலைத்துச்செங் குணத்திற்பித் திடுமாதர்
பதித்துத்தந் தனத்தொக்கப்
பிணித்துப்பண் புறக்கட்டிப்
பசப்பிப்பொன் தரப்பற்றிப் பொருள்மாளப்
பறித்துப்பின் துரத்துச்சொற்
கபட்டுப்பெண் களுக்கிச்சைப்
பலித்துப்பின் கசுத்திப்பட் டுழல்வேனே
கதித்துக்கொண் டெதிர்த்துப்பிற்
கொதித்துச்சங் கரித்துப்பற்
கடித்துச்சென் றுழக்கித்துக் கசுரோரைக்

கழித்துப்பண் டமர்க்குச்செப்
பதத்தைத்தந் தளித்துக்கைக்
கணிக்குச்சந் தரத்தைச்சுத் தொளிர்வேலா

சிதைத்திட்டம் புரத்தைச்சொற்
கயத்தைச்சென் றுரித்துத்தற்
சினத்தக்கன் சிரத்தைத்தட் சிவனுர்தஞ்

செவிக்குச்செம் பொருட்கற்கப்
புகட்டிச்செம் பரத்திற்செய்த்
திருச்சிற்றம் பலச்சொக்கப் பெருமாளே.

பதவுரை

கதித்து கொண்டு எதிர்த்து=விரைந்து எழுந்து எதிர்த்தும், பின் கொதித்து=பின் கோபங்கொண்டு, சங்கரித்து=பகைவர்களைக் கொன்று, பல் கடித்து சென்று உழக்கி=கோப மிகுதியால் பற்களைக் கடித்துப் போய் சேனைக் கடலைக் கலக்கி, துக்க அசுரோரை=துக்கப் படும் அசுரர்களை, கழித்து=அழித்து, பண்டு அமரர்க்கு=முன்னாள் தேவர்களுக்கு, செம் பதத்தை தந்து அளித்து=செவ்விய பதவியைக் கொடுத்து அருள்புரிந்து, கைக்கு அணி=கையில் அணிந்துள்ள, குச்சம்=குஞ்சங்கட்டிய, தரத்து ஐ சுத்த ஒளிர் வேலா=அச்சத்தைத் தரும் அழகிய பரிசுத்தமாக ஒளி செய்கின்ற வேலாயுதத்தை உடையவரே! அம் புரத்தை சிதைத்திட்டு=அழகிய திரிபுரங்களை அழிவு செய்து, சொல் கயத்தை சென்று உரித்து=புகழ்பெற்ற யானையிடம் சென்று அதன் தோலை உரித்து, தன் சின தக்கன் தன்=தான் என்ற அகந்தை கொண்ட தக்கனுடைய தலையை அறுத்துத் தள்ளிய, சிவனுர் தம்=சிவனுருடைய, செவிக்கு=திருச்செவிக்கு, செம்பொருள் கற்க=பிரணவத்தின் செம்பொருளை அவர் கற்கும்படி, புகட்டி=உபதேசித்து, செம்பரத்தில் செய்=செவ்விய மேலான வகையில் அமையப் பெற்ற, திருச்சிற்றம்பல சொக்க=திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள அழகிய, பெருமாளே=பெருமையிற் சிறந்தவரே! கதித்து=நிறைந்து தோன்றி, பொங்கு அலுக்கு ஒத்து=மிகுந்த இருளுக்குச் சமானமாகி, பணைத்து=செழிப்புற்று, கொம்பு என தெற்றி=கொம்புபோல் சடையாகப் பின்னப்பட்டு, செம்பொனை கவித்து=செம்பொன்னுலாகிய ஐடைபில்லையைக் கவித்து, துற்று=நெருக்கங் கொண்ட, குழலார் பின்=கூந்தலையுடைய மாதர்களின் பின் சென்று, கழுத்தை பண்பு உறகட்டி=கழுத்தை நன்ருகக் கட்டியும், சிரித்து=சிரித்தும், தொங்கலை பற்றி கலைத்து=தொங்கும்

ஆடையாகிய முன்தாஃனயைப் பிடித்துக் கலேத்தும், செம் குணத்தில் பித்து இடும் மாதர்=நல்ல குணத்தைப் பித்துப் பிறக்கும்படிச் செய்கின்ற மாதர்களின் மீது, பதித்து=மனத்தைப் பதித்து, தம் தனத்துக்கு ஒக்க=தாம் பெற்ற பொருளுக்குத் தக்கபடி, பிணித்து=வசப்படுத்தியும், பண்பு உற கட்டி=நன்ருகத் தழுவியும், பசப்பி=இன்முகங்காட்டி ஏய்த்தும், பொன் தர பற்றி=பொன் கொடுக்கப் பெற்றும், பொருள் மாள பறித்து=பொருள் யாவும் வற்றிப் போகின்ற அளவும் பறித்தும், துரத்தும் பின் துரத்தும் சொல்=பின்னே அவனே வெருட்டித் துரத்துகின்ற சொற்களேயுடைய, கபட்டு பெண்களுக்கு= வஞ்சகப் பெண்கள் மீது, இச்சை பலித்து=ஆசை உண்டாகி, பின் அசுத்திப்பட்டு உழல்வேனே=பின்னர் வருத்தப்பட்டு அடியேன் அலேச்சல் உறுவேனே?

பொழிப்புரை

வேகமாக எழுந்து எதிர்த்தும், பின்னர் சீற்றமுற்றுப் பகைவரைக் கொன்று, பற்களேக் கடித்துக் கோபித்துச் சென்று, சேனேக்கடலேக் கலக்கித் துயரப்படும் அசுரர்களே ஒழித்து, தேவர்களுக்குச் செவ்விய பதவியைத் தந்தருளி, திருக்கரத்தில் தரித்துள்ள குஞ்சங்கட்டிய, அச்சத்தைத் தரும் அழகிய தூய்மையான ஒளிவீசும் வேலாயுதத்தையுடையவரே! அழகிய திரிபுரத்தை அழிவுசெய்து, புகழ்பெற்ற கயமுகனுகிய யானேயை உரித்து, தான் என்ற அகந்தை கொண்ட தக்கனது தலேயைத் தள்ளிய சிவபெருமானுடைய, திருச்செவியில் பிரணவ மந்திரச் செம்பொருளே உபதேசித்து, மேலான வகையில் செவ்வையாகச் செய்து அமைத்த திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள அழகிய பெருமிதமுடையவரே! நிறைந்து தோன்றி, மிகுந்த இருளுக்கு நிகராகி, செழிப்புற்று, கொம்பு போல் பின்னப்பட்டு, தங்கப் பில்லேயைக் கவித்து, நெருக்கங் கொண்ட கூந்தலேயுடைய மாதர்களின்பின் சென்று, கழுத்தை நன்ருகக் கட்டியும், சிரித்தும், முந்தாஃனயைப்பற்றிக் கலேத்தும் நல்ல குணத்தைப் பித்துப் பிடிக்கச் செய்கின்ற அம்மகளிர் மீது மனத்தைப் பதித்து, தாம் பெற்ற பொருளுக்கு ஏற்ப ஆடவரை வசப்படுத்தி, நன்ருகத் தழுவியும், இன்முகங்காட்டி ஏமாற்றியும், பொன்பெற்று, பொருள் வற்றும் அளவுக்கு பொருளேப் பறித்து, பொருள் வற்றியபின் அவனேத் துரத்துங் கொடுஞ் சொற்களேயுடைய வஞ்சகப் பொதுமாதரை விரும்பி, பின் துயரப்பட்டு அடியேன் உழலக்கடவேனே!

விரிவுரை

இத் திருப்புகழில் முதல் நான்கு அடிகளில் பொது மகளிரின் சாகசங்கள் பேசப்பெறுகின்றன.

5, 6 அடிகளில் அசுர வதம் பற்றிக் கூறப்படுகிறது.

சிதைத் திட்டம் புரத்தை:—

திரிபுரத்தைச் சிவபெருமான் சிரித்து எரித்தருளினார்.

முப்புரம் என்பன ஆணவம் கன்மம் மாயை என்ற மும் மலங்களைக் குறிக்கும்.

> அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
> முப்புரம் எய்தனன் என்பர்கள் மூடர்கள்
> முப்புரமாவது மும்மல காரியம்
> அப்புரம் எய்தமை ஆரறிவாரே. —திருமந்திரம்.

கயத்தைச் சென்றுரித்து:—

யானை வடிவாக வந்த கயமுகாசுரனை உரித்து யானைத் தோலை சிவமூர்த்தி மேல் போர்வையாகப் போர்த்திக் கொண்டார்.

> "...........இருகோட் டொருகைப்
> பொருபூதர முரித்தேகாச மிட்டபுராந்தகன்"
> —கந்தரலங்காரம்.

சினத் தக்கன் சிரத்தைத் தள்:—

அகந்தைகொண்டு சிவநிந்தை செய்த தக்கனுடைய தலையைக் கொய்து, அவனுக்கு ஆட்டுத்தலையை அரனார் அருளினார்.

> "மன்னான தக்கனை முன்னாள் முடித்தலை
> வன்வாளியிற் கொளுந் தங்கருபன்"
> —திருப்புகழ் (என்னால்).

கருத்துரை

சிதம்பரம் மேவிய செவ்வேளே! மாதர்மயக்கில் உழலாமல் உய்வித்தருள்.

திருப்புகழ்

சிரித்துச் சங்கொளி யாமின லாமென
வுருக்கிக் கொங்கையி ளுலுற மேல்விழு
செணத்திற் சம்பள மேபறி காரிகள் சிலபேரைச்
சிமிட்டிக் கண்களி ளுலுற வேமயல்
புகட்டிச் செந்துகி லால்வெளி யாயிடை
திருத்திப் பண்குழ லேய்முகி லோவிய
மயில்போலே

அருக்கிப் பண்புற வேகலை யால்முலை
மறைத்துச் செந்துவர் வாயமு தூறல்க
ளளித்துப் பொன்குயி லாமென வேகுரல் மிடறேதை
அசைத்துக் கொந்தள வோலைக ளார்மணி
மினுக்கிச் சந்தன வாசனை சேறுட
னமைத்துப் பஞ்சணை மீதணை மாதர்களுறவாமோ

இரைத்துப் பண்டம ராவதி வானவ
ரொளித்துக் கந்தசு வாமிப ராபர
மெனப்பட் டெண்கிரி ஏழ்கடல் தூள்பட அசுரார்கள்
இறக்கச் சிங்கம தேர்பரி யானையொ
டுறுப்பிற் செங்கழு கோரிகள் கூளியொ
டிரத்தச் சங்கம தாடிட வேல்விடு மயில்வீரா

சிரித்திட் டம்புர மேமத னுருட
லெரித்துக் கண்டக பாலியர் பாலுறை
திகழ்ப்பொற் சுந்தரி யாள்சிவ காமிநல் கியசேயே
திருச்சித் தந்தனி லேகுற மானதை
யிருத்திக் கண்களி கூர்திக ழாடக
திருச்சிற் றம்பல மேவியு லாவிய பெருமாளே.

பதவுரை

இரைத்து=ஓலமிட்டுக் கொண்டு, பண்டு அமராவதி வானவர் ஒளித்து=முன்பு அமராவதி நகரில் வாழ்ந்த தேவர்கள் மேருமலையில் ஒளித்துக் கொண்டிருந்து, கந்த சுவாமி=கந்த சுவாமியே! பரா= மேலான பொருளே! பரம் என=எங்களைக் காப்பது உன் பாரம் என்று முறையிட, எண் கிரி பட்டு=எட்டு குல கிரிகளும் பொடி பட்டு, ஏழ்கடல் தூள்பட=ஏழு கடல்கள் வற்றித் துகளாக, அசுரர்

கள் இறக்க=அசுரர்கள் இறந்துபட, சிங்கம் தேர்=சிங்கங்கள் பூட்டப்பட்ட தேர்கள், பரி=குதிரைகள், யானையொடு=யானைகள், உறுப்பில் செம் கழுகு=மிகுதியாய் நெருக்கமாய் வந்த சிவந்த கழுகுகள், ஓரிகள்=நரிகள், கூளியொடு=பேய்களுடன், இரத்த சங்கம் அது ஆடிட=உதிர வெள்ளத்தில் விளையாட, வேல் விடும்=வேலாயுதத்தைச் செலுத்திய, மயில் வீரா=மயில் வீரரே! சிரித்திட்டு=புன்னகை புரிந்து, அம் புரமே=அழகிய திரிபுரத்தையும், மதனூர் உடல்=மன்மதனுடைய உடலையும், எரித்து கண்ட=பொடி செய்து பார்த்தருளிய, கபாலியர் பால் உறை=கபால மேந்திய சிவமூர்த்தியின் பக்கத்தில் விளங்குகின்ற, திகழ் பொன் சுந்தரியாள்=பொலிவு நிறைந்த அழகியவளாகிய, சிவகாமி நல்கிய சேயே=சிவகாமியம்மை பெற்ற குழந்தையே! திருசித்தம் தனிலே=உமது திருவுள்ளத்திலே, குற மான் அதை இருத்தி=குறமகளாம் வள்ளி பிராட்டியை இருத்தி, கண் களிகூர்=கண்ணால் கண்டு மகிழ்ச்சி மிக்கடைந்து, ஆடக திருச்சிற்றம்பலம் மேவி உலாவிய=பொன் வேய்ந்த திருச்சிற்றம்பலத்தில் விரும்பி உலாவும், பெருமாளே=பெருமை மிகுந்தவரே! சிரித்து சங்கு ஒளி ஆம் என=சிரித்துப் பற்களின் ஒளியைச் சங்கின் ஒளி எனவும், மினல் ஆம் என=மின்னலின் ஒளி எனவும் வெளிக்காட்டி, உருக்கி=காண்போரது மனத்தை உருக்கி, கொங்கையினால்=கொங்கை கொண்டு, உற மேல்விழு கெணத்தில்=மேலே பொருந்த விழுகின்ற அக்கணத்திலே, சம்பளமே பறி காரிகள்=விலையாக காசுகள் பறிக்கின்றவர்கள், சில பேரை=சில பேர்வழிகளை, சிமிட்டி=கண்களைச் சிமிட்டி, உறவே மயல் புகட்டி=அழுத்தமாக காம மயக்கத்தை உள் புகுத்தி, செம் துகிலால் வெளியாய்=செவ்விய ஆடையால் உடல் தெரியுமாறு, இடை திருத்தி=இடையை சீர்திருத்தி, பண் குழல் ஏய்=இசைப் பாடல்கள் புல்லாங்குழல் போல் இனிமை பொருந்த, முகில் ஓவிய மயில் போல=மேகத்தைக் கண்ட சித்திர மயில் போல, அருக்கி=தமது அருமையைக் காட்டி, பண்பு உறவே=ஒழுங்காக, கலையால் முலை மறைத்து=ஆடையால் கொங்கையை மறைத்து, செம் துவர் வாய் அமுது ஊறல்கள் அளித்து=செம்பவளம் போன்ற வாயிதழின் அமுதத்தை யொத்த ஊறல்களைப் பருகக் கொடுத்து, பொன் குயில் ஆம் என=அழகிய குயில் என்னும்படி, குரல் மிடறு ஓசை அசைத்து=குரல் ஏழ் கண்டத்தில் ஓசையை அசையச் செய்து, கொந்தளம்=கூந்தலையும், ஓலைகள்=காதோலைகளையும், ஆர் மணி=நிறைந்த அணிகலன்களையும், மினுக்கி=செப்பஞ் செய்து ஒளிபெற வைத்து, சந்தன வாசனை சேறு உடன் அமைத்து=சந்தனத்தின் நறுமணக் கலவையுடன் அமைத்து, பஞ்சு அணை மீது அணை=பஞ்சு மெத்தையின்மீது சேர்கின்ற, மாதர்கள் உறவு ஆமோ=மாதர்களின் உறவு ஆமோ? (ஆகாது).

பொழிப்புரை

அமராவதி நகரில் வாழ்ந்த தேவர்கள், மேருமலையில் ஒளிந்திருந்து, "கந்தசுவாமியே! பரம்பொருளே! எங்களைக் காப்பது உன் பாரம்" என்று ஓலமிட்டு முறையிட, எட்டுக் குலமலைகளும் பொடிபட்டு, ஏழ் கடல்கள் தூள்பட, அசுரர்கள் இறந்துபட, சிங்கங்கள்பூட்டப்பட்ட தேர்கள், யானைகள், மிகுதி யாய் நெருக்கமாய் வந்த சிவந்த கழுகுகள், நரிகள் பேய்கள் உதிர வெள்ளத்தில் விளையாட வேலாயுதத்தைச் செலுத்திய மயில்வீரரே! அழகிய திரிபுரத்தையும், மன்மதனுடைய உடலை யும் சிரித்து எரித்தருளிய கபாலம் ஏந்திய சிவபெருமானுடைய பக்கத்தில் விளங்கும், அழகிய சிவகாமசுந்தரி பெற்ற குழந் தையே! திருவுள்ளத்தில் வள்ளிநாயகியை இருத்திக் கண்ணால் கண்டு களிகூரும், சிறந்த பொன் வேய்ந்த. திருச்சிற்றம்பலத் தில் விரும்பியுலாவும் பெருமிதமுடையவரே! பற்களின் ஒளி சங்கின் ஒளிபோலவும், மின்னலின் ஒளிபோலவும் மின்னும் படிச் சிரித்து, காண்போரது உள்ளத்தை உருக்கி, கொங்கை கள் மார்பின்மீது அழுந்துமாறு மேலே வீழ்ந்து, அந்த க்ஷணத் திலேயே கூலியாகப் பொன்னைப் பறிக்கின்றவர்கள், சிலரிடம் கண்சிமிட்டி காம மயக்கத்தை மிகவும் புகட்டி வெளியான இடத்திலே சிவந்த ஆடையால் இடையைச் சீர்படுத்தி, புல்லாங் குழல் போன்ற இனிய பாடல்களைப்பாடி, மேகத்தைக் கண்ட மயில்போல் தமது அருமையைக் காட்டி, ஆடையால் ஒழுங் காகக் கொங்கையை மறைத்து, சிவந்த பவளம்போன்ற வாய் இதழின் அமுதம் போன்ற ஊறல்களைப் பருகத் தந்து, அழகிய குயில் என்னும்படி, கண்டத்தில் குரல் எழும்படிச் செய்து, கூந்தலையும் காதோலைகளையும், நிறைந்த ஆபரணங்களையும் ஒளிபெறச் செய்து, சந்தனத்தின் கலவையுடன் அலங்கரித்து, பஞ்சு மெத்தைமீது தழுவுகின்ற பொதுமாதர்களின் நட்பு ஆகுமோ? ஆகாது.

விரிவுரை

இத்திருப்புகழின் முதல் நான்கு அடிகள் பொதுமாதரின் திறத்தைக் கூறுகின்றன.

சிரித்து!—

பொதுமாதர் காரணம் இன்றியே ஆடவர் மயங்குமாறு சிரித்துப் பேசுவர்.

சிமிட்டி:—

ஆண்கள் மயங்குமாறு கண்களைச் சிமிட்டிச் சிமிட்டிச் சாகசம் புரிவர்.

ஓலைகள்:—

பழங்காலத்தில் பனை ஓலையைச் சுருட்டிக் காதில் தொளை யிட்டு அதில் அணிவார்கள். பின்னர் தங்கம் மணி இவை களுடன் கூடிய அணிகளைச் செய்து அணியலாயினுர்கள். ஆயினும் அந்தப் பழைய பேராலேயே காதோலையென்று கூறுவது மரபு.

பச்சிலைக் குழையைக் காதில் சொருகுவர்; அதனுல் காதணி குழையெனப் பேர் பெற்றது.

தாலம்—பனை. தால ஓலையால் அணிந்த காரணத்தால் தாலி எனப் பேர் பெற்றது.

இரைத்துப் பண்டமராவதி வானவர் ஒளித்து:—

பொன்னுலகின் தலைநகரம் அமராவதிப் பட்டணம்.

அதில் வாழ்ந்த அமரர்கள், பானுகோபன் முதலிய அரக்கர் களால் தங்கள் நாடு நகரங்களை யிழந்து, மாமேரு மலையில் உள்ள குகைகளில் ஒளிந்திருந்து, முருகனை வேண்டி முறை யிட்டு உய்வு பெற்றுர்கள்.

கபாலியர்:—

பிரமகபாலத்தை ஏந்திய கையர் சிவபெருமான்.

கருத்துரை

சிதம்பரம் மேவிய செவ்வேளே! மாதர் மயல் நீங்க அருள் செய்.

திருப்புகழ்

தத்தையென் றெப்பிடுந் தோகைநட் டங்கொளுவர்
பத்திரங் கட்கயங் காரியொப் புங்குழல்கள்
சச்சையங் கெச்சையுந் தாளவொத் தும்பதுமை
யென்பநீலச்
சக்கரம் பொற்குடம் பாலிருக் குந்தனமொ
டொற்றிநன் சித்திரம் போலஎத் தும்பறியர்
சக்களஞ் சக்கடஞ் சாதிதுக் கங்கொலையர்
சங்கமாதர்

சுத்திடும் பித்திடும் சூதுகற் குஞ்சதியர்
முற்பணங் கைக்கொடுந் தாருமிட் டங்கொளுவர்
சொக்கிடும் புக்கடன் சேருமட் டுந்தனகும்
விஞ்சையோர்பால்
தொக்கிடுங் கக்கனுஞ் சூலைபக் கம்பிளவை
விக்கலுந் துக்கமுஞ் சீதபித் தங்கள்கொடு
துப்படங் கிப்படுஞ் சோரனுக் கும்பதவி
யெந்தநாளோ

குத்திரங் கற்றசண் டாளர்சத் தங்குவடு
பொட்டெழுந் திட்டுநின் ருடஎட் டந்திகையர்
கொற்றமுங் கட்டியம் பாடநிர்த் தம்பவுரி
கொண்டவேலா
கொற்றர்பங் குற்றசிந் தாமணிச் செங்குமரி
பத்தரன் புற்றஎந் தாயெழிற் கொஞ்சுகிளி
கொட்புரந் தொக்கவெந் தாடவிட் டங்கிவிழி
மங்கைபாலா

சித்திரம் பொற்குறம் பாவைபக் கம்புணர
செட்டியென் றெத்திவந் தாடிநிர்த் தங்கள்புரி
சிற்சிதம் பொற்புயஞ் சேரமுற் றும்புணரு
மெங்கள்கோவே
சிற்பரன் தற்பரன் சீர்திகழ்த் தென்புலியூர்
ருத்திரன் பத்திரஞ் சூலகர்த் தன்சபையில்
தித்தியென் றெத்திநின் ருடுசிற் றம்பலவர்
தம்பிரானே.

பதவுரை

குத்திரம் கற்ற சண்டாளர்=வஞ்சகத்தைக் கற்ற சண்டாளர்களாகிய அசுரர்களும், சத்த அம் குவடு=ஏழு அழகிய மலைகளும், பொட்டு எழுந்திட்டு=பொடிபட்டுக் குலையவும், எட்டு அம் திகையர்=அழகிய எண்திசைப் பாலகர்கள், நின்று ஆட=மகிழ்ச்சியுடன் நின்று கூத்தாடவும், கொற்றமும் கட்டியமும் பாட=தேவரீருடைய வீரத்தைப் புகழ்மாலையாகப் பாடவும், நிர்த்தம் பவுரி கொண்ட=நடனமாகிய ஆடல்களைச் செய்த, வேலா=வேலாயுதக் கடவுளே! கொற்றர் பங்கு உற்ற=வெற்றியாளராம் சிவபெருமானுடைய இடப் பக்கத்தில் உள்ள, சிந்தாமணி=சிந்தாமணியை

யொத்தவரும், செம் குமரி=செவ்விய குமாரியும், பத்தர் அன்பு உற்ற=பக்தர்கள் அன்பு கொண்ட, எம் தாய்=எமது அன்னையும், எழில் கொஞ்சு கிளி=கொஞ்சுகின்ற அழகிய கிளி போன்றவரும், கொட் புரம் தொக்க வெந்து ஆட=சுழன்று திரியும் திரிபுரங்கள் ஒன்றுபட்டு வெந்து அசையும்படி, விட்ட அங்கி விழி=நெருப்பை உமிழ்ந்த நெருப்புக் கண் படைத்தவரும் ஆகிய, மங்கை பாலா= பார்வதி தேவியின் திருக்குமாரரே! சித்திரம் பொன்குற பாவை பக்கம் புணர=விசித்திரமான அழகுடைய வள்ளிநாயகியின் பால் சென்று சேர, செட்டி என்று எத்தி வந்து=வளையல் செட்டியாக ஏமாற்றி வந்து, ஆடி நிர்த்தங்கள் புரி=திருவிளையாடல் செய்து கூத்துக்கள் செய்து, சில் சிதம்=நுண்ணிய ஞானமாதாகிய வள்ளி, பொன் புயம் சேர=அழகிய புயத்தில் தழுவ, முற்றும் புணரும்= அவரை முழுதும் கலந்த, எங்கள் கோவே=எங்கள் தலைவரே! சிற் பரன்=ஞான முதல்வரும், தற் பரன்=பரம் பொருளும், சீர் திகழ் தென் புலியூர்=பெருமை விளங்கும் அழகிய புலியூர் என்ற சிதம்பரத் தில் உறைகின்ற,ருத்திரன்=உருத்திர மூர்த்தியும், பத்திர அம் சூல கர்த்தன்=இலைகளையுடைய அழகிய சூலாயுதத்தைக் கொண்ட தலை வரும், சபையில்=பொன்னம்பலத்தில், தித்தி என்று ஒத்தி நின்று ஆடும்=தித்தி என்னுந் தாளத்துக்குத் தக்கபடி நின்று நடனம் புரி கின்றவருமாகிய, சிற்றம்பலவர்=நடராஜப் பெருமான் மெச்சும், தம்பிரானே=தனிப்பெருந் தலைவரே! தத்தை என்று ஒப்பு இடும் தோகை=கிளி என்று ஒப்புமை கூறத்தக்கவராய் மயில் போன்றவ ராய் உள்ளவர்கள், நட்டம் கொளுவர்=நடனஞ் செய்பவர்கள்; பத் திரம் கண்=அம்பு போன்ற கண்ணும், கயம் காரி ஒப்பும் குழல் கள்=நீருண்ட கார் மேகம் போன்ற கூந்தலும் கொண்டு, சச்சை அம் செச்சையும்=ஒலி செய்யும் அழகிய கால் சதங்கை, தாள ஒத்தும் பதுமை என்ப=தாள ஒத்துப் போல ஒலி செய்ய பாவை போன்றவர், நீல சக்கரம்=நீல நிறமுள்ள சக்கரவாகப் பறவை, பொன் குடம்=தங்கக் குடம் போலவும் விளங்கி, பால் இருக்கும் தனமொடு=பால் கொண்டதாயுள்ள கொங்கை கொண்டு, ஒற்றி=அணைந்து, நன் சித்திரம் போல=நல்ல ஓவியம் போல் விளங்கி, எத்தும் பறியர்=வஞ்சித்துப் பொருள் பறிப்பவர்கள், ச களம் சாதி=முழுப்பொய்யைப் பரிகாசத்தினுல் சாதிக்கின்ற, துக்கம் கொலையர்=துக்கத்தைத் தரும் கொலைத் தொழிலையும் செய்ப வர்கள், சங்க மாதர்=கூட்டமாகிய விலைமாதர்கள், சுத்திடும் பித்து இடும்=தங்கள் வசத்திலேயே சுழலும்படியான மயக்கத்தைத் தரு கின்ற, சூது கற்கும் சதியர்=சூதுகளைக் கற்றுள்ள வஞ்சகர்கள், முன் பணம் கை கொடு=முன்னதாகப் பணத்தைக் கையிற் கொண்டு, வந்து ஆரும் இட்டம் கொளுவர்=செலுத்தும் யார் மீதும் தமது

விருப்பத்தைச் செலுத்துபவர்கள், சொக்கு இடும்பு கடன் சேரு மட்டும் தனகும்=மயங்கும்படியான இடும்பு வார்த்தைகளைச் சொல்லிப் பணம் சேரும் வரை கொஞ்சிப் பேசும், விஞ்சையோர் பால்=மாயவித்தைக்காரர்கள் ஆகிய விலைமகளிரால், தொக்கிடும் கக்கலும்=தொகையாக வருகின்ற வாந்தியும், சூலை=சூலை நோயும், பக்கப் பிளவை=விலாப் பக்கத்தில் வரும் ராஜ கட்டியும், விக்கலும்=விக்கல் நோயும், துக்கமும்=துன்பமும், சீதம்=குளிர் நோயும், பித்தங்கள் கொடு=பித்த நோய்களும் கொண்டு, துப்பு அடங்கி படும்=வலிமை குன்றி அழிகின்ற, சோரனுக்கும்=கள்வனாகிய அடியேனுக்கும், பதவி எந்த நாளோ=சிவ பதவி கிடைப்பது எந்த நாளோ அறிகிலேன்?

பொழிப்புரை

வஞ்சனையைக் கற்ற கொடியவர்களாகிய அசுரர்களும், அழகிய ஏழு மலைகளும் பொடிபட்டு அழியவும், அழகிய எண் திசைப் பாலகர்கள் நின்று ஆனந்தத்தால் ஆடவும், உமது வீரத்தைப் புகழ் மாலையாகப் பாடவும், போர்க்களத்தில் நடனம் புரிந்த வேலாயுதக் கடவுளே! வெற்றிக் கடவுளாகிய சிவ மூர்த்தியின் இடப்பக்கத்தில் விளங்கும் சிந்தாமணி போன்றவரும், செவ்விய இளங்குமாரியும், அடியார்கள் அன்புகொண்ட எமது அன்னையும், கொஞ்சுகின்ற அழகிய கிளிபோன்றவரும், சுழன்று திரிந்த திரிபுரங்களும் எரியுமாறு நெருப்பைச் சிந்திய கனற்கண்ணையுடையவருமாகிய பார்வதி தேவியின் பாலகரே! விசித்திரமான அழகுடைய வள்ளிநாயகிபால் வளையல் செட்டி வடிவுடன் சென்று அவரை ஏமாற்றிப் பல திருவிளையாடல்கள் புரிந்து நுண்ணிய ஞானமுடைய அப்பிராட்டியின் அழகிய புயங்களைத் தழுவி அவருடன் முழுதும் கலந்த எங்கள் தலைவரே! ஞானத் தலைவரும், பரம்பொருளும், சிறப்பு மிகுந்த அழகிய சிதம்பரத்தில் உறைகின்ற உருத்திரமூர்த்தியும், இலை போன்ற நுனிகளையுடைய சூலாயுதத்தையுடைய தலைவரும், கனகசபையில் தித்தி என்ற தாளவொத்துடன் நின்று நடனம் புரிகின்ற நடராஜப் பெருமான் மெச்சுகின்ற தனிப்பெருந் தலைவரே! கிளியையொத்த மயில் போன்றவர்கள்; நடனம் ஆடுபவர்கள்; அம்புபோன்ற கண்களும், நீருண்ட கருமுகில் போன்ற கூந்தலும்கொண்டு, ஒலிக்கும் காற்சதங்கைகள் தாளத்துக்கு ஏற்ப ஓசைசெய்யும் பதுமைபோன்றவர்கள்; நீல நிறமுடைய சக்கரவாகப் பறவையையும் தங்கக் குடத்தையும்

ஒத்து பால் சுரந்துள்ள கொங்கைகொண்டு அணைத்து, ஓவியம்போல் விளங்கி, வஞ்சித்துப் பணம் பறிப்பவர்கள்; முழுப் பொய்யைப் பரிகாசத்தினால் சாதிக்கின்ற துயரந்தரும் கொலைத் தொழிலும் புரிபவர்கள்; கூட்டமான விலைமாதர்கள்; தங்கள் வசமாகவே சுழலும்படியான மயக்கத்தைத் தருகின்ற சூதினைக் கற்ற வஞ்சகர்கள்; முன்பணமாகத் தரும் யார்மீதும் விருப்பத்தைச் செலுத்துபவர்கள்; மயங்கும்படியான அகந்தை வார்த்தைகளைச் சொல்லி பொருள் சேரும் வரை கொஞ்சிப் பேசும் மாய வித்தைக்காரர்களாகிய பொதுமாதரால், தொகையாக வரும் வாந்தியும், சூலையும், பக்கப்பிளவையும் விக்கலும், துன்பமும், சீதளவியாதியும், பித்தநோயும் வாட்டிவதைக்க, அதனால் வலிமைகுன்றி அழிகின்ற கள்வனாகிய அடியேனுக்கும் நற்பதவி கிடைப்பது எந்நாளோ?

விரிவுரை

தத்தையென் றெப்பிடுந் தோகைநட்டங் கொளுவர்:—

பொதுமாதர்கள். கிளிபோல் கொஞ்சிப் பேசி மயில்போல் நடனம் புரிவார்கள்.

பத்திரங் கட்கயங் காரியொப்புங் குழல்கள்:—

பத்திரம்—அம்பு.

பத்திரம் கண்—அம்புபோன்ற கண்கள்.

கயம் காரி ஒப்பும் குழல்—நீருண்ட மேகம்போன்ற கரிய கூந்தல்.

சச்சையங் கெச்சையும்:—

சத்திக்கின்ற கெச்சை –காற்சதங்கை.

நீலசக்கரம்:—

நீலநிறமுடைய சக்ரவாகப் பறவைபோன்ற கொங்கை.

சக்களஞ் சக்கடம் சாதி:—

ச கள்ளம் சக்கடம் சாதி—முழுப் பொய்யை பரிகாச வார்த்தைகளால் சாதிப்பவர்.

சங்கமாதர்:—

சங்கம்—கூட்டம். கூட்டமாயுள்ளவர்கள்.

சுத்திடும் பித்திடும் சூது கற்குஞ் சதியர்:—

சுத்திடும்—சுற்று என்பதன் மரூஉ.

தமது வசமாக ஆடவர் சுற்றும்படியான பித்தத்தைத் தலைக்கு ஏற்றி வஞ்சனைகளைக் கற்ற சதிகாரர்.

முற்பணங் கைக் கொடுவந்தாரு மிட்டங் கொளுவர்:—

முன்பணம் கை கொடு வந்து ஆரும் முன்பணமாகப் பொருளைக் கொண்டு செலுத்தப்படும் யாரும்.

சொக்கிடும் புக்கடன் சேருமட்டுந் தனகும்:—

சொக்கு இடும்பு கடன்.

சொக்கும்படியான இடும்பு வார்த்தைகள் பேசி பணம் சேரும்வரை கொஞ்சிப் பேசுபவர்.

தனகுதல்—கொஞ்சுதல்.

"அருத்தி வாழ்வொடு தனகிய மனைவியும்" —திருப்புகழ்.

சத்தங்குவடு:—

சத்த அம் குவடு—ஏழு அழகிய மலைகள்.

சூரன் போரிட்டபோது அசுரர்கள் ஏழு மலைகளாக நின்று மாயஞ் செய்தனர். அம்மலைகளை முருகவேள் பொடிபட்டு அழியச் செய்தருளினர்.

எட்டந் திகையர்:—

எட்டு அம் திகையர். திகை—திசை.

அழகிய எண்திசைக் காவலர்கள். கிழக்கில்—இந்திரன்; தென்கிழக்கில்—அக்கினி; தெற்கில்—இயமன்; தென்மேற்கில்—நிருதி; மேற்கில்—வருணன்; வடமேற்கில்—வாயு; வடக்கில்—குபேரன்; வடகிழக்கில்—ஈசானன்.

கட்டியம் பாட:—

அரசனிடம் வீர விருதுகளைப் புகழ்ந்து பாடுவது. அஷ்ட திக்கு பாலகர்கள் முருகவேளைக் கட்டியம் பாடித் துதி செய்தார்கள்.

கொற்றர்:—

கொற்றம்—வெற்றி. வெற்றியுடையவர் சிவபெருமான்.

சிந்தாமணி:—

சிந்தாமணி பாற்கடலில் அமுதத்துடன் தோன்றியது. இது சிந்தித்தவை யனைத்தையும் தரவல்லது. இச் சிந்தாமணி இந்திரனிடம் இருந்தது.

இந்திரன் விநாயகரை வழிபடும்போது, தங்கக் குடத்தில் சிந்தாமணியைப் பதித்து விநாயகருக்குக் காணிக்கையாகத் தந்தான்.

விநாயகர் சிந்தாமணி பதித்த பொற்குடத்தால் அம்மையப்பரை வழிபடுவர். அதனுல் சிந்தாமணி விநாயகர் எனப் பேர் பெற்றுர்.

**''சிந்தாமணிக் கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகர்''** **—மயில் விருத்தம்.**

**''சிந்தாமணி தென்கடலமிர்தம் தில்லையானருளால்
வந்தால் இகழப்படுமோ''** **—திருக்கோவையார் 12.**

கொட்புரங் தொக்க வெந்தாட:—

கொட்பு—சுழற்சி.

''கொட்புற்றெழ நட்பற் றவுணரை வெட்டி''
—(முத்தைத்தரு) திருப்புகழ்.

'சதா சுழன்று சுழன்று உலகுக்கு இடுக்கண் செய்த திரிபுரங்கள் எரிய கண்களால் நெருப்பைச் சிந்திய உமாதேவி' என்கின்றுர் அருணகிரியார். அர்த்தநாரி சிவபிரான் ஆதலால் அக்கினிக் கண்ணில் பாதி அம்பிகைக்கும் உண்டு. ஆதலால் திரிபுரத்தைக் கனற் கண்ணுல் எரித்தவர் பார்வதி என்பது பொருள்.

நிர்த்தம்புரி:—

வள்ளிநாயகியிடம் முருகவேள் வளையல்காரச் செட்டியாகவும் வேங்கைமரமாகவும் முதிய முனிவராகவும் வந்து திருவிளையாடல் புரிந்தருளினுர். புரி—புரிந்து.

சிற்சிதம்:—

சில் சிதம்—நுண்ணிய ஞானம்.

சிதம்—ஞானம்.

வள்ளியம்மையார் நுண்ணிய ஞான வடிவுடையவர்.

ருத்திரன்:—

ருத்திரன் என்ற திருப்பேர் ஆதியந்தம் இல்லாத சிவபெருமானுடையது.

துன்பக் கடலில் வீழ்ந்த உயிர்களை கைகொடுத்து எடுப்பவர். ஆதலால் உருத்திரன் என்று பேர் பெற்றுர்;

இன்னலங் கடலுட்பட்டோர் யாரையும் எடுக்கும் நீரால்
உன்னரும் பரமமூர்த்தி உருத்திரன் எனும் பேர்பெற்றுன்
அன்னவன் தரவந்தோர்க்கும் அடியடைந்தோர்க்கும் அன்னுன்
தன்னுருவெய்தி னேர்க்குஞ் சார்ந்ததாம் அவன் தனிப்பேர்.

—கந்தபுராணம்.

ஆகவே சிவபெருமானுடைய திருநாமம் உருத்திரன் என உணர்க.

அன்றி சிவபெருமானுடைய அடிமலரை நினைக்கும் கணங்கட்கும் உருத்திரர்கள் என்று பேர் உண்டு. ஏகாதச உருத்திரர், நூற்றெட்டு உருத்திரர்கள், ஸ்ரீகண்டருத்திரர், சிவசாரூபம் பெற்ருேர் ஆகிய பலருக்கும் உருத்திரர் என்று பேர் அமைந்தது. இதனுல் உருத்திரன் என்ற பேர் கொண்டவர் பலர். சிவபெருமான் மகாருத்திரர்.

கிருஷ்ண யஜுர்வேதத்தில் தலைசிறந்த பகுதி ஸ்ரீருத்ரம்.

தைத்திரீய சம்ஹிதை ஏழு காண்டத்துள் நாலாவது காண்டத்தின் நடுநாயகமாக உள்ளது ஸ்ரீருத்ரம்.

"நமஸ்தே அஸ்து பகவந் விச்வேச்வராய
மஹாதேவாய த்ரியம்பகாய த்ரிபுராந்தகாய
த்ரிகாக்னி காலாய காலாக்னி ருத்ராய
நீலகண்டாய ம்ருத்யுஞ்ஜயாய சர்வேச்வராய
சதாசிவாய ஸ்ரீமந் மஹாதேவாயநம:"

என்று ஸ்ரீமந்திரம் முழங்குகின்றது.

அக்கினிதேவனுக்கும் உருத்திரன் என்று பேருண்டு. அவனுக்கு அப்பேர் வந்த காரணம் பின்வருமாறு:

தேவர்கள் ஒருசமயம் தமது செல்வங்களை அக்கினிபால் ஒப்புவித்து அசுரர்கள்மீது போருக்குச் சென்ருர்கள். வெற்றி பெற்று வந்து தேவர்கள் கேட்டபோது அக்கினி தர மறுத்து ஓடினுன். தேவர்கள் அவனைத் தொடர்ந்து சூழ்ந்தபோது அவன் அழுதான். ஆதலால் உருத்திரன் என்று பேர் பெற்றுன்.

எனவே உருத்திரன் என்ற பேர் பலருக்கும் உண்டு. இந்த விவரந் தெரிந்தவர்கள் மயக்கமடையார்கள்.

பத்திரஞ் சூலகரத்தன்:—

பத்திர அம் சூலம்.

இலைபோன்ற கூரிய மூன்று பிரிவுடைய சூலம். மூவிலைச் சூலம் என்பர். இது சிவபெருமானுடைய ஆயுதம்.

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்று மூன்று சக்திகளைக் குறிக்கும்.

கருத்துரை

கனகசபையில் நடமிடும் சிவபெருமானுடைய திருக்குமாரரே! மாதர் வயப்பட்ட சிறியேன் நற்பதவி சேர அருள் புரிவாயாக

திருப்புகழ்

தனத்திற்குங் குமத்தைச்சந்
    தனத்தைக்கொண் டணைத்துச்சங்
கிலிக் கொத்தும் பிலுக்குப்பொன்
    தனிற்கொத்துந் தரித்துச்சுந்
தரத்திற்பண் பழித்துக்கண்
    சுழற்றிச்சண் பகப்புட்பங் குழல்மேவித்

தரத்தைக்கொண் டசைத்துப்பொன்
    தகைப்பட்டுந் தரித்துப்பின்
சிரித்துக்கொண் டழைத்துக்கொந்
    தளத்தைத்தண் குலுக்கிச்சங்
கலப்புத்தன் சுரத்துக்கொண்
    டணைத்துச்சம் ப்ரமித்துக்கொண் டுறவாடிப்

புனித்தப்பஞ் சணைக்கட்டிண்
    படுத்துச்சந் தனப்பொட்டுங்
குலைத்துப்பின் புயத்தைக்கொண்
    டணைத்துப்பின் சுகித்திட்டின்
புகட்டிப்பொன் சரக்கொத்துஞ்
    சிதைப்பப்பொன் தரப்பற்றும் பொதுமாதர்

புணர்ப்பித்தும் பிடித்துப்பொன்
    கொடுத்துப்பின் பிதிர்ச்சித்தன்
திணிக்கட்டுஞ் சிதைத்துக்கண்

சிறுப்பப்புண் பிடித்தப்புண்
புடைத்துக்கண் பழுத்துக்கண்
டவர்க்குக்கண் புதைப்பச்சென் றுழல்வேனே

சினத்துக்கண் சிவப்பச்சங்
கொலிப்பத்திண் கவட்டுச்செங்
குவட்டைச்சென் றிடித்துச்செண்
டரைத்துக்கம் பிடிக்கப்பண்
சிரத்தைப்பந் தடித்துக்கொண்
டிறைத்துத்தெண் கடற்றிட்டுங்
கொளைபோகச்

செழித்துப்பொன் சுரர்ச்சுற்றங்
களித்துக்கொண் டளிப்புட்பஞ்
சிறக்கப்பண் சிரத்திற்கொண்
டிறைத்துச்செம் பதத்திற்கண்
திளைப்பத்தந் தலைத்தழ்த்தம்
புகழ்ச்செப்புஞ் சயத்துத்திண் புயவேளே

பனித்துட்கங் கசற்குக்கண்
பரப்பித்தன் சினத்திற்றிண்
புரத்தைக்கண் டெரித்துப்பண்
கயத்தைப்பண் டுரித்துப்பன்
பகைத்தக்கன் தவத்தைச்சென்
றழித்துக்கொன் றடற்பித்தன் தருவாழ்வே

படைத்துப்பொன் றுடைத்திட்பன்
தனைக்குட்டும் படுத்திப்பண்
கடிப்புட்பங் கலைச்சுற்றும்
பதத்தப்பண் புறச்சிற்றம்
பலத்திற்கண் களித்தப்பைம்
புனத்திற்செங் குறத்திப்பெண் பெருமாளே.

பதவுரை

சினத்து=கோபித்து, கண் சிவப்ப=கண்கள் சிவக்கவும், சங்கு ஒலிப்ப=சங்குகள் ஒலிக்கவும், திண்கவட்டு=வலிய கிளைகளையுடைய,

செம் குவட்டை சென்று இடித்து=செவ்விய கிரவுஞ்ச மலையைச் சென்று பொடிபடுத்தி, செண் (சேண்)=விண்ணுலகத்தாரையும், தரை=மண்ணுலகத்தாரையும், துக்கம் பிடிக்கப் பண்=துன்பம் பிடிக்கச் செய்த (அசுரர்களின்), சிரத்தை பந்து அடித்துக்கொண்டு இறைத்து=தலைகளைப் பந்தடிப்பது போல் அடித்து அத் தலைகளைப் போர்க்களம் முழுவதும் சிதறவைத்து, தெண் கடல் திட்டும் கொளை போக=தெளிந்த கடல் மேடாகுந் தன்மையைக் கொள்ளுதலை அடைந்து நிற்க, செழித்து=செழிப்புற்று, பொன் சுரர்=பொன்னுலகத்துத் தேவர்களும், சுற்றம் களித்துக் கொண்டு=அவர்களின் சுற்றத்தாரும் மகிழ்ச்சி பூண்டு, அம்மகிழ்ச்சியுடன் அளி புட்பம் சிறக்க=வண்டுகள் மொய்க்கும் மலர்களை கூடையுடன் விளங்குமாறு, சிரத்தில் கொண்டு இறைத்து=தலையில் சுமந்து கொண்டு திருவடியில் அர்ச்சித்து, செம் பதத்தில் கண் திளைப்ப=உமது சேவடியில் தமது தலைகளைத் தாழ்த்தி, அம் புகழ் செப்பும்=அழகிய உமது திருப்புகழைச் சொல்லும், சயத்து=வெற்றி விளங்குகின்ற, திண் புய வேளே=வலிய தோள்களையுடைய விரும்பத் தக்கவரே! பனித்து உட்க=நடுங்கி அச்சங்கொள்ள, அங்கசற்கு=மன்மதன் மேல் கண் பரப்பி=நெற்றிக் கண்ணில் சிந்திய தீப்பொறியைச் செலுத்தி, தன் சினத்தில்=தாம் கொண்ட கோபத்தால், திண் புரத்தைக் கண்டு எரித்து=வலிய திரிபுரத்தை விழித்து எரி செய்து, பண் கயத்தை பண்டு உரி=அலங்காரமாய் வந்த யானையை முன்பு உரித்த, துப்பன்=வலிமை பூண்டவரும், பகை தக்கன்=பகைமை பூண்டிருந்த தக்கனுடைய, தவத்தை சென்று அழித்து கொன்ற=யாகத்தைச் சென்று அழித்து அவனைக் கொன்றவரும், பித்தன்=பித்தப் பிரானுமாகிய சிவபெருமான், தரு வாழ்வே=பெற்ற பெருவாழ்வாய செல்வரே! படை துப்பு ஒன்று உடை திட்பன்தனை=படைக்கின்ற ஆற்றல் ஒன்றையுடைய திறமை படைத்த பிரமதேவனை, குட்டும் பண்படுத்தி=குட்டிப் பண்படுத்திய, கடி புட்பம் கலை சுற்றும்=நறுமணமுள்ள மலர்களும் பரத நூற்படி சுற்றி நடிக்குந் திறமுமுடைய, பதத்த=திருவடிகளை யுடையவரே! பண்பு உற=உலகம் பண்பாட்டை யடையுமாறு, சிற்றம்பலத்தில் கண் களித்த=திருச்சிற்றம்பலத்தில் கண் களி கொண்ட, பெருமாளே=பெருமை யுடையவரே! மை புனத்தில் செம் குறத்தி பெண்=பசிய தினைப்புனத்திலிருந்த செவ்விய குறமகளாம் வள்ளிபிராட்டி மகிழும், பெருமாளே=பெருமையிற் சிறந்தவரே! தனத்தில்=கொங்கைகளில், குங்குமத்தை=செஞ்சாந்தையும், சந்தனத்தை கொண்டு அணைத்து=சந்தனத்தையுங் கொண்டு அப்பி, சங்கிலி கொத்தும்=சங்கிலிக் கொத்துக்களும், மிலுக்கும் பொன் தனிக் கொத்தும்=மினுக்கும் பொன்னாலாகிய அணிகலன்களும், தரித்து=அணிந்து, சுந்தரத்தில் பண்பு அழித்து=

தமது அழகில் கடுப்பட்டவரது நல்ல பண்புகளை அழித்து, கண் சுழற்றி=கண்களைச் சுழற்றியும், சண்பக புட்பம்=சண்பக மலரை, குழல்=கூந்தலில் வைத்து அலங்கரித்தும், தரத்தை கொண்டு அசைத்து=தங்களது மேன்மை விளங்க உடலை அசைத்தும், பொன் தகை பட்டும் தரித்து=பொற் சரிகை பொருந்திய பட்டாடையை உடுத்தும், பின் சிரித்தும்=பின்னர் புன்னகை புரிந்தும், அழைத்துக் கொண்டு=அழைத்துக் கொண்டு சென்று, கொந்தளத்தை தண் குலுக்கி=குளிர்ந்த கூந்தலை அசைத்தும், சங்கு அலப்பு=சங்கு வளையல்கள் ஒலிக்கும், தன் கரத்து கொண்டு அணைத்து=தமது கரங்களால் கொண்டு போய்த் தழுவியும், சம்ப்ரமித்து கொண்டு உறவு ஆடி=பெருங்களிப்புடன் உறவு செய்து, புனித்த பஞ்சு அணைக்கண்= பரிசுத்தமான பஞ்சு மெத்தை மீது, திண் படுத்து=நன்ருகப் படுத்து, சந்தன பொட்டும் குலைத்து=வந்தவனுடைய சந்தனப் பொட்டையுங் கலைத்து, பின் புயத்தை கொண்டு அணைத்து=பின்னர் தன் தோள்களால் தழுவி, பின் இன்பு சுகித்திட்டு=பின்னர் இன்ப சுகத்தை அநுபவித்து, புகட்டி=வந்தவர்க்கு இன்பத்தை நுகரச் செய்து, பொன் சர கொத்தும் சிதைத்து=பொன் மாலைக் கொத்துக்கள் செலவழிந்த பின், பொன் தர பற்றும்=பொன்னைத் தரும் படி பற்றுகின்ற, பொது மாதர்=பொது மகளிரை, புணர் பித்தும் பிடித்து, பொன் கொடுத்து=அம்மாதருக்குப் பொன்னைக் கொடுத்து, பின் பிதிர் சித்தன்=பின்னர் கலங்கும் மனமுடையவனுகிய அடியேன், திணி கட்டும் சிதைத்து=வலிமை பொருந்திய உடல் கட்டும் சிதைவுண்டு தளர்ந்து, கண் சிறுத்து=கண்ணும் சிறுத்துப் போய், புண் பிடித்து=புண்களை யடைந்து, அ புண் புடைத்து= அந்தப் புண் வீங்கிப் பருத்து, கண் பழுத்து=புண்ணின் முனை பழுத்து, கண்டவர்க்கு=அதைப் பார்ப்பவர்கள் எல்லாம், கண் புதைப்ப=கண்களை மூடிச் செல்லும்படியாக, சென்று உழல்வேனே= அவல நெறியிற் சென்று நான் திரியலாமோ?

பொழிப்புரை

சினங்கொண்டு அதனுல் கண்கள் சிவக்கவும் சங்குகள் ஒலிக்கவும், வலிய கிளைகளையுடைய செவ்விய கிரவுஞ்ச மலையைப் பொடிப்படுத்தி, விண்ணுலகத்தோரையும் மண்ணுலகத்தோரையும் துன்புறுத்திய அசுரர்களின் தலைகளைப் பந்தாடி, அத்தலைகள் எவ்விடத்தும் சிதறச் செய்து, தெளிந்த கடல் திட்டாகுமாறு செய்து, வளமையான பொன்னுலகத்து அமரர்களும், அவர்களின் சுற்றத்தாரும் மகிழ்ச்சியடைந்து, வண்டு மொய்க்கும் மலர்க் கூடை

களைத் தலையிற் சுமந்துசென்று அர்ச்சித்து, தேவரீரது திருவடிகளில் தமது கண்கள் மகிழத் தலைகளைத் தாழ்த்தி, உமது திருப்புகழைப் பாடிப் பரவும் வெற்றியுடன் விளங்கும் திருப்புயங்களையுடைய வேளே! நடுங்கி அச்சங்கொள்ள, மன்மதன்மீது நெற்றிக் கண்ணின் நெருப்பைச் செலுத்தி, சீற்றத்தால் விழித்து திரிபுரங்களைப் பார்த்து எரித்து, முன்னாள் போரின் அலங்காரமாய் வந்த யானையை உரித்து வலிமை கொண்டவரும், பகைத்த தக்கனுடைய வேள்வியை அழித்து அவனைக் கொன்றவரும், வலிமை நிறைந்த பித்தருமாகிய சிவ பெருமான் பெற்ற பெருஞ் செல்வமே! படைக்கின்ற ஆற்றல் ஒன்றையுடைய திறமைகொண்ட பிரமனைக் குட்டி, தகுந்த நறுமணமுள்ள மலர்களும், பரத நூற்படிச் சுழன்று நடிக்குந் தன்மையுமுடைய திருவடிகளையுடையவரே! அலங்கரித்துள்ள திருச்சிற்றம்பலத்தில் கண்களிக்கும்படி விளங்கும் பெருமித முடையவரே! பசிய தினைப்புனத்தில் செவ்விய வள்ளிநாய கிக்கு உரிய பெருமிதம் உடையவரே! கொங்கையில் செஞ் சாந் தையும் சந்தனத்தையும் அப்பி, மினுக்கும் பொன்னாலாகிய சங்கிலிகளும், அணிகலன்களும் அணிந்து, தமது அழகில் ஈடுபட்டவர்களின் நல்ல பண்புகளை அழித்துக் கண்களைச் சுழற்றியும், சண்பக மலர்களைக் கூந்தலில் சூடியும், தமது மேன்மை விளங்க உடலை அசைத்தும், பொற்சரிகையுடன் கூடிய பட்டு ஆடையை உடுத்தும், பின் சிரித்தும், ஆடவரை அழைத்துக்கொண்டு, கூந்தலை அன்புடன் அசைத்தும்; சங்கு வளையல்கள் ஒலிக்குங் கரத்தால் கட்டியணைத்து, பெருங் களிப்புடன் உறவு பூண்டு, பரிசுத்தமான பஞ்சணையில் நன்றாகப் படுத்து, வந்தவனுடைய சந்தனப் பொட்டைக் கலைத்து, பின்னர் தோள்களால் தழுவி, இன்பசுகத்தைத் தந்து, பொன் அணிகலன்களைச் செலவழித்து, பொன்னைத் தரும்படி பற்றுகின்ற பொதுமாதர்களைச் சேரும் பைத்தியமும் பிடித்து, பொன்னை வழங்கிப் பின் கலங்கும் மன முடைய அடியேன், வலிய உடல்கட்டு தளர்ந்து, கண்சிறுத்து, புண்களை யடைந்து, அப்புண்கள் வீங்கி, அதன் கண் பழுத்து, அதைக் கண்டவர்கள் அருவருத்துத் தங்கள் கண்களை மூடிக் கொள்ள, அவநெறி சென்று சிறியேன் திரியலாமோ?

விரிவுரை

இத்திருப்புகழில் முதல் நான்கு அடிகள் பொதுமாதரின் சாகசங்களையும், அம்மாதர் வலைப்பட்டார் அடையுந் துயரங் களையும் விரித்து விளம்புகின்றன.

செண்டரைத் துக்கம் பிடிக்கப்பண்!—

சேண் என்ற சொல் செண் என வந்தது. சேண்—ஆகாயம். விண்ணுலகவாசிகள். விண்ணுலகத்தோரையும் மண்ணுல கத்தோரையும் துன்பஞ் செய்த அசுரர்கள்.

தலைத் தழ்த்தம் புகழ்ச் செப்பும்:—

தாழ்த்து என்ற சொல் குறுகி தழ்த்து என வந்தது.

தேவர்கள் முருகன் திருவடியில் தலைவணங்கி வணக்கம் புரிந்து அப்பெருமானுடைய புகழைப் பாடிப் பரவினர்கள்.

பனித்துட்கங்கசன்:—

பனித்து உட்க அங்கசன். நடுங்கிக் கலங்க மன்மதனைச் சிவமூர்த்தி பார்த்து எரித்தருளினர்.

படைத்துப் பொன்னுடைத் திட்பன்:—

படை துப்பு ஒன்று உடை திட்பன். உலகங்களைப் படைக் கின்ற ஆற்றல் ஒன்றையுடைய திறமை வாய்ந்த பிரமன்.

கலைச் சுற்றும் பதத்தன்:—

பரத சாத்திரக்கலை சூழ்ந்துள்ள திருவடியையுடையவன் முருகன்.

கருத்துரை

திருச்சிற்றப்பலமேவிய செவ்வேளே! பொதுமாதர் மயல் நீங்க அருள்செய்.

கற்பு

கமலம்மாள் கழறிய கதை

அன்று தீபாவளி. உலகமெல்லாம் கொண்டாடும் நன்னுள். பொன்னுள். கமலம்மாவின் வீட்டில் எல்லோரும் விடியற்காலையில் எண்ணெயிட்டு நீராடி, நீருடி, புத்தாடை யுடுத்து, நல்லுணவுண்டு நனி மகிழ்ந்தார்கள். ஊரெங்கும் பட்டாசுகள் படபட என்று வெடிக்கின்றன. குழந்தைகள் ஆடித் துடிக்கின்றன.

கமலம்மாள் எல்லா வேலைகளையும் முடித்துக் கூடத்தில் பாய் போட்டு "சிவமே" என்று கூறி ஓய்வாக அமர்ந்தாள். அப்போது அவளுடைய குழந்தைகள் அவளைச் சுற்றி அமர்ந்தன. அக்காட்சி முழு நிலாவைச் சுற்றி நட்சத்திரங்கள் சூழ்ந்தது போல் இருந்தது.

கமலம்மா! தன் குழந்தைகளைப் பார்த்துக் கூறுகின்றுள்.

"என் செல்வங்களே! இன்று தீபாவளி. தீப ஆவளி, என்ற இரு சொற்கள் சேர்ந்து தீபாவளி என வந்தது. ஆவளி என்றுல் வரிசை. விளக்குகளை வரிசையாக வைத்து இறைவனை வழிபடும் நாள் தீபாவளி.

தீபங்களை ஏற்றினுல் இருள் தானே விலகிவிடும். அதுபோல் நம் உள்ளக் கோயிலில் ஞானவிளக்கை ஏற்றினுல் அறியாமையாகிய இருள் விலகிவிடும்.

"உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி
திடம்படும் ஞானத்தீயால் எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே."

என்று அற்புதமாகப் பாடுகின்றுர் அப்பர் சுவாமிகள்.

இவ்வாறு ஞானவிளக்கேற்றி அறியாமையை அகற்றுவதே தீபாவளிப் பண்டிகையின் நோக்கம். நம்மிடம் உள்ள காமம் குரோதம் லோபம் மதம் மாத்சர்யம் என்ற தீய சக்திகளை இறைவனுடைய திருநாமங்களாகிய பட்டாசுகளினுல் சுட்டுத் தள்ளவேண்டும்.

இறைவனுடைய திருநாமங்கள் தீய சக்திகளை அழிக்கும் படைக்கலங்கள் ஆகும்.

"படைக்கலமாக உன்நாமத் தெழுத்தஞ் சென்நாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்

துடைக்கினும் போகேன் தொழுதுவணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலத்தரனே''

என்று அருளிச் செய்த நாவுக்கரசரது நற்றமிழ்ப் பாடலால் இது விளங்குகின்றது.

இத்தகைய வித்தகக் கருத்துக்களை உள்ளத்தில் கொள்ளாமல் வெறும் வேடிக்கையும் கேளிக்கையுமாக இந்நாள் மக்களால் கொண்டாடப் பெறுகின்றது.

மனிதனுடைய துன்பங்கள் அனைத்துக்கும், மூலகாரணம் அஞ்ஞானந்தான். அஞ்ஞானம் என்ருலும் அறியாமை என்ருலும் ஒன்று தான்.

மூடன் தனக்கே முடிவு தேடிக்கொள்வான். இதற்கு ஒரு உதாரணக் கதை கூறுவேன். கவனமாகக் கேளுங்கள்.

மந்தமாபுரி என்று ஒரு பட்டினம். சோலைகளும் வயல்களும் வளமை செறிந்த குன்றுகளும் சூழ்ந்திருந்தன. அவைகளுடன் அந்நகரில் அறியாமையுஞ் சூழ்ந்திருந்தது. அறிவின் ஒளி வீசவில்லை.

அந்நகரை ராஜராஜேஸ்வர ப்ருஹ மூட பஹதூர் என்ற அரசன் ஆட்சி புரிந்து வந்தான். அவனுக்கும் அறிவுக்கும் ஆயிரம் மைல் இடைவெளி. அவனுடைய மந்திரி மகா மந்த சிகாமணி. "அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்'' என்றபடி குடிகள் அறியாமைச் சேற்றில் ஆழ்ந்திருந்தார்கள். அரசன் சதா உயர்ந்த உணவுகளை உறையில் பஞ்சு திணிப்பது போல் வயிறு புடைக்க உண்பதும், உறங்குவதும், மது நமது என்று கருதி குடிப்பதும் சூது விளையாடுவதுமாக உயர்ந்த வாணுளை வீணுளாகக் கழித்து வந்தான், அவனுடைய வாழ்வில் அஞ்ஞான இருள் மூடியிருந்தது. அந்த நகரத்தின் ஈசான மூலையில் ஒரு மடாலயம் இருந்தது. அம்மடத்தில் ஒரு மகான் இருந்தார். அவர் சிவானுபூதிச் செல்வராய் விளங்கினுர். சதா சிவத்தை நோக்கித் தவத்தைச் செய்து கொண்டிருந்தார். அவரிடம் பல அன்பர்கள் வந்து நல்ல நெறிகளை யறிந்து உய்வு பெற்று வந்தார்கள். பாலைவனத்திலே ஒரு சந்தனத்தரு தளிர்விட்டு பூத்துக் குலுங்குவதுபோல் காட்சி யளித்தது அம்மடாலயம்.

இத்தகைய ஞான மடத்தில் மரத்தில் புல்லுருவி தோன்றியது போல் ஒரு சீடன் வந்து சேர்ந்தான். சீடன் வடிகட்டிய மூடன். குருதேவரைக்காண வருபவர்கள் அன்புடன் கொணர்ந்து தரும் பால் பழம் முதலிய அனைத்தையும் அவன் ஒருவனே குண்டோதரனைப் போல் உண்டு உவந்து கொழுத்து உலாவினுன். மகான் உயிர்வாழும் பொருட்டு மிகக் குறைந்த அளவில் சிறிது உண்பார்.

"கனியேனும் வறிய செங்காயேனும் உதிர்சருகு
கந்த மூலங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப்புசித்து நான்
கண்மூடி மௌனியாகித்
தனியே இருப்பதற்கு எண்ணினேன்"

என்ற தாயுமானப் பெருந்தகையாரது திருவாக்குக்கு அவர் இலக்கிய மாக அமைந்திருந்தார்.

இவருடைய கொள்கைக்கு நேர்மாருகச் சீடஞகிய மூடன் இருந் தான்.

"பாலனைத்தும் பழமனைத்தும் வடைதோசை
தேன்குழல் பண்டங்கள் ஆன அனைத்தும்
சாலனைத்த திண்வயிறு வீங்கவுண் டுறங்கியே
சதாசார மாகநின்ருன்"

குருதேவர் அவனை ஒரு நாள் பார்த்து "அப்பா! "மீதூண் விரும் பேல்" என்பது ஔவையார் வாக்கு. உணவு உயிர் வாழ்வதற்கே அமைய வேண்டும், அதிகம் உண்டு இந்த உடம்பைப் பருக்க வைக்கக் கூடாது. உடம்பைப் பெருக்க வைத்தால் கடைசியில் நான்கு பேருக்குச் சுமையாகி அவர்களின் தோள்களை வருத்தும்.

"ஊனினைச் சுருக்கி உள் ஒளி பெருக்கி"

என்கின்ருர் மாணிக்கவாசகர்.

உடம்பு பருப்பதனுல் பலப்பல இடர்ப்பாடுகள் உண்டு. உணர் வைப் பெருக்கு. உணவைச் சுருக்கு. சுருக்கவில்லையானுல் அது உன் கழுத்துக்கு வரும் சுருக்கு. இங்கு வரும் பழம் பால் பட்சணங்களை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடு. ஏழைகளுக்கு இட்டது ஈசனுக்கு இட்டதாகும். நீயே உண்ணுதே. பிறருக்கு ஈயாமல் தனியேயிருந்து உண்பவன் மறுபிறப்பில் பெருச்சாளியாகப் பிறப்பான். நீ என் பொன்மொழியைக் கேட்டு அதன்படி நடப்பாயாக" என்ருர்; குருவின் அமுத உபதேச மழை மணலில் பெய்தது போல் ஆயிற்று; அம்மூட னுடைய செவியில் நுழையவில்லை; முன்னூறு ஆண்டுகள் ஊற வைத்தாலும் கருங்கல் (மெத்தென்று) மிருதுவாகாது. கரித்துண்டை ஆயிரம்முறை பால்விட்டு அவித்தாலும் கருமை மாருது. அதுபோல் அம் மூடன் திருந்திஞன் இல்லை. வரவர முன்னையினும் பன்மடங்கு உண்டான். அவன் உடம்பு மாமிச மலைபோல் பருத்தது. ஆனைக் குட்டி அசைவதுபோல் அசைந்து உலாவினுன். குனியவோ நிமிரவோ இயலாது துன்புற்ருன். பக்கவாட்டில் இலைபோட்டு உண்பான்; வயிறு வண்ணுனுடைய சால்போல் புடைத்திருந்தது.

குருநாதர் இவனுடைய போக்கைக் கண்டு எல்லாம் சிவன் செயல் என்று எண்ணி, அவர் தமது சிவயோக சாதனையில் அமர்ந்திருந்தார். மடத்துக்கு வருபவர் தரும் காணிக்கைகளை இவன் வாங்கி, குருநாதனுக்குத் தெரியாமல் அக்கினி காரியங்களும் செய்து வந்தான்.

ஓர் அற்புத வழக்கு

நாள்தோறும் ராஜராஜேஸ்வர ப்ருஹத் மூட பஹதூர் என்ற மன்னனும், மகாமந்த சிகாமணியும் அவர்களுக்குச் சிறிதும் குறைவில்லா நீதிபதியும் அரண்மனைக்கு முன் திறந்த வெளியில் ஆதனங்கள் இட்டு மாலை 4 மணி முதல் 6 மணி வரை நீதிவிசாரணை நடத்துவார்கள். இது அந்த வூரின் வழக்கம்.

குற்றமே புரியாத ஒருவனுக்குத் திடீர் என்று வேண்டாத ஒருவன் பழி சுமத்தி மன்னனிடம் முறையிட்டால் தண்டனை கிடைத்துவிடும். எந்த சமயத்தில் யாருக்கு என்ன விபத்து நேருமோ? என்று குடிகள் மதிகலங்கி கதிகலங்கி வாழ்ந்தார்கள்.

"கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே"

என்பது இந்த நகருக்கே உரியது.

ஒரு நாள் மாலை ஒரு ஒடுக்கமான தெருவழியே ஒருவன் நடந்து கொண்டிருந்தான். புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த சுவர் சரிந்து அவன்மீது விழுந்தது. அதனால் கால் முறிந்துவிட்டது. அவன் முறிந்த காலுடன் மெல்ல வந்து அரசனிடம் முறையிட்டான்.

"நீதிவழுவாத நிருபர் ஏறே! உமது ஆட்சியில் இப்படிப்பட்ட கொடுமை நிகழலாமா! என் கால் முறிந்துவிட்டது. இனி நான் நடக்க முடியாது. அதனால் என் குடும்பம் பட்டினியால் வாடும். தாங்கள் கருணையும் அறிவும் படைத்த உத்தம மன்னர். நீதி வழங்க வேண்டும்" என்றான்.

அவன் புகன்ற புகழுரை மூட மன்னனுக்குத் தலையில் பனிக் கட்டி வைத்ததுபோல் இருந்தது. உச்சி குளிர்ந்துவிட்டது.

கொதித்தான்; பூமியைக் காலால் ஓங்கி மிதித்தான்.

"அடேய்! சேவகனே! நீ ஓடிப்போய் அந்த வீடு கட்டும் ஆளைப் பிடித்து இழுத்துக் கொண்டு வா என்றான்."

அந்த வீட்டின் சொந்தக்காரன், இன்று நம் உயிர் முடிந்துவிட்டது என்று எண்ணி நடுநடுங்கிக் கொண்டு வந்து மன்னன் முன்னர் நின்றான்.

"ஓய் நீதானே கட்டப்படுகின்ற வீட்டுக்கு உரியவன்?"

"ஆம்."

"நீ அஜாக்கிரதையாகக் கட்டியபடியால் அவ்வழியே சென்ற இம் மனிதன் மீது சுவர் விழ்ந்து இவன் கால் முறிவுண்டது. நான் நீதி வழுவாத அரசன். ஆதலால் உனக்கு மரணதண்டனை விதித்திருக் கின்றேன்."

"மதிமிகுந்த துதிமிகுந்த மகாமன்னர் பெருமானே! அக்கட்ட டத்துக்குச் சொந்தக்காரன் அடியேன்தான்; நான் பொய் புகல மாட்டேன். ஆனால் அதைக் கட்டும் கொத்தனார்தானே குற்றவாளி. சுவர் எப்படி எழுப்பினார்கள் என்று எனக்குத் தெரியாதே. அருளே ஒரு வடிவாய தாங்கள் என்மீது குற்றஞ் சுமத்தித் தண்டிப்பது நியாயமாகாதே."

"பேஷ்; இவன் கூறுவதில் நியாயம் இருக்கின்றது.

"சேவகனே! இவனைப் போகச் சொல். அந்தக் கொத்தனைப் பிடித்து ஈர்த்துக் கொண்டு வா."

கொத்தன் உடல் நடுங்கி வேந்தன் முன் நின்றான்.

அரசன் அவனைப் பார்த்து இடி இடி என்று சிரித்தான். மந்திரி யும் வயிறு குலுங்கச் சிரித்தான்.

"கொத்தனே! உன்னால் ஒருவனுடைய கால் முறிந்துவிட்டது. எனவே இக்குற்றத்துக்காக நீ தூக்குமேடைக்குப் போ" என்று கூறி கர்ஜனை செய்தான். அங்கு வந்த முந்திரிப் பருப்பை அள்ளி வாயில் இட்டுக் கொண்டான்.

கொத்தன், "குணமிகுந்த கொற்றவர் பெருமானே! என்மீது குற்றம் இல்லை. பல கொத்தர்களை வைத்து வேலை வாங்குபவன். என் கீழே வேலை பார்த்த மேஸ்திரிதான் இதற்குப் பொறுப்பாளி. அவன் கவனக்குறைவாகச் சுவர் வைத்தான்போலும். உத்தமமான உள்ளம் படைத்த தங்கள் திருவுள்ளமான கண்ணாடியில் உண்மை தோன்றுமே?" என்றான்.

அரசன், புன்னகை பூத்தான். மேலும் கீழுமாகத் தலையை ஆட் டினான். "ஆம்! ஆம். நீ சொன்னது முற்றிலும் சரி. நீ போகலாம்" என்று உத்தரவிட்டான்.

"காவலனே! சுவர் வைத்த மேஸ்திரி எங்கிருந்தாலும் நாயை இழுத்து வருவதுபோல் இழுத்து வா" என்றான்.

அப்போது அந்த மேஸ்திரி ஒரு பாலத்தைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தான். அவனைக் கழுகு தன் இரையைக் கவ்வுவதுபோல்

மேஸ்திரியின் கழுத்தைப் பிடித்துக் கொண்டு எமனுக்கு முன்னே பாவிகளை எமதூதன் நிறுத்துவதைப் போல் நிறுத்தினன்.

மேஸ்திரிக்கு என்ன விஷயம் என்று தெரியவில்லை அரசனுக்கு முன்னே திருதிரு என்று விழித்து உடல் பதைத்து நின்றான்.

"ஏ மூடனே! சுவர் எடுக்கின்ற நீ உறுதியாகச் செய்யவேண்டாமா? நீ எடுத்த சுவர் வீழ்ந்து இவனுடைய கால் முறிந்தது. என்னுடைய மாட்சி நிறைந்த ஆட்சியில் இப்படி நடப்பதைக் கண்டு நான் பொறுப்பேனா?" என்று கூறும்போது மன்னன் கண்ணில் நீர் பெருகியது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். மூக்கு நீரையும் உறிஞ்சிக் கொண்டான்.

"தறுதலையே! உனக்கு மரணதண்டனை விதித்திருக்கின்றேன். விரைவில் தூக்குமேடைக்குப் போ" என்றான்.

வயது முதிர்ந்த கிழவனாகிய அந்த மேஸ்திரிக்கு அரசனுடைய வடிகட்டிய மூடத்தனம் இப்படிப்பட்டதென்று தெரியும். அவன் ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு கூறுவான்.

"அறநெறி வழுவாத அண்ணலே! உமது பாதபங்கஜத்துக்குப் பல கோடி வணக்கங்கள். அந்தச் சுவரை நான்தான் கட்டினேன். ஆனால் அடியேன்மீது குற்றம் இல்லை. சுண்ணும்பு குழைத்துக் கொடுத்தவன் அதிக நீர் விட்டு இளக்கமாகக் கொடுத்தான். அதனால் சுவர் உறுதிப்படவில்லை. ஆதலால் குற்றம் என்னுடையதன்று. சுண்ணும்புக் கலவை செய்து கொடுத்தவன் பேர் செங்கண்ண சிங்கு. அவன்தான் இதற்குப் பொறுப்பாளி" என்றான்.

அரசன் "நீ உத்தம அறிவாளி. உன்னை நான் அவசியமில்லாமல் இழுத்து வந்ததற்காக மெத்த வருந்துகின்றேன். நீ போய் சுகமாக இரு" என்று சொல்லிவிட்டுக் காவலர்களைத் திரும்பிப் பார்த்தான். குறிப்பறிந்த காவலர்கள் ஓடி, செங்கண்ண சிங்கைத் தேடினார்கள்.

அவன் எங்கோ ஒரு ஒதுக்குச் சந்தில் சிறிது குடித்துவிட்டு அறிவு மயங்கிப் படுத்திருந்தான்.

காலதூதனைப் போல் அவனைக் கையு மெய்யுமாகப் பிடித்துக் கொண்டு இழுத்து வந்து மூட பஹதூருக்கு முன் நிறுத்தினன் சேவகன்.

அரசன் அவனிடம் ஒன்றும் கூறாமல் "இந்த அயோக்கியனைத் தூக்கில் போடுங்கள்" என்றான்.

அவன் கலங்கினன்; குடிவெறியும்கூட நின்று துணைபுரிந்தது.

"அரசே! என்னை ஆளவந்த அண்ணலே! இந்த மேஸ்திரி எனக்கு 5 ரூபாய் தரவேணும். அந்தப் பாக்கியை வாங்கித் தாருங்கள்" என்றான்.

அரசன் இடி இடித்தது போல் கர்ஜித்தான்.

"இந்த விசாரணை நீண்ட நேரமாக நடைபெறுகின்றது. நீ உன் பணம் பாக்கியைப் பற்றிப் பேசக் கூடாது. நீ தண்ணீர் அதிகம் விட்டுச் சுண்ணும்புக் கலவைச் செய்ததனால் சுவர் விழுந்து இவன் கால் முறிந்தது. அதனால் உனக்கு மரணதண்டனை கொடுத்திருக்கின்றேன்" என்றான்.

செங்கண்ண சிங்குக்கு இப்போது வெறி தெளிந்தது. சுற்றும் முற்றும் பார்த்தான். பொறியில் அகப்பட்ட எலிபோல் ஆனான்.

"கருணைக் கடலே! என் அப்பன்மீது ஆணை; உங்கள்மீது ஆணை! என்மீது தப்பு இல்லை. எனக்குத் தண்ணீர் கொணர்ந்து கொடுத்தவன் என்னை மதிக்கவில்லை. சிறுபிள்ளைத் தனமாகச் சிரிப்பதும் ஆடுவதும் பாடுவதும் கேலி செய்வதுமாக இருந்தான். அவன் கணக்காக விடச் சொன்னால் என் சொல்லைப் பொருள் படுத்தாமல் நீரை நிறைய விட்டுவிட்டான். ஆதலால் அது என் பிழையன்று. நீர் விட்ட தறுதலையின் குற்றமாகும்" என்றான்.

அரசன் "அன்பனே! நீ உன் வார்த்தையில் உண்மையுளது. உனக்கு நீர் வார்த்தவன் யார்?" சீக்கிரம் சொல்லு. நேரமாகின்றது: விரைந்து நீதி வழங்கவேண்டும்" என்றான்.

கிழவன், "மகா மகா ஞானசிகாமணியே! தண்ணீர் விட்டவன் பேர் தொட்டப்பன்" என்றான்.

அரசன் கட்டளைப்படி தொட்டப்பனை எங்கெங்கோ அலைந்து திரிந்து இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

அவன் அரசன் முன் நின்று சிறுபிள்ளைத்தனமாக ஒரு புல்லாங் குழலை ஊதினான்.

அரசன் ஆலகால விஷம்போல் சீறினான். எரிமலை எரியைக் கக்குவதுபோல் சினக்கனலைக் கக்கினான். நடந்த நிகழ்ச்சியைச் சொல்லி, "புத்தியில்லாதவனே! நீ தண்ணீர் அதிகம் விட்டபடியால் சுண்ணும்பு அதிகம் இளக்கமாக இருந்து சுவர் இடிந்து இவன் கால் ஒடிந்துவிட்டது. சீக்கிரம் தூக்குமேடைக்குப் போ" என்றான்.

அந்த இளைஞன் "தோள் குலுங்கச் சிரித்தான். "அரசே. அறிஞர் சிங்கமே! பழி ஒருபக்கம்; பாவம் ஒரு பக்கமா? பனைமரத்தில்

தேள் கொட்டுவது; தென்னை மரத்தில் நெரி கட்டுவதா? இது என்ன விபரீதம். தயாசாகரமாகிய தாங்கள் கூட இப்படிச் செய்வதா? என் வாக்குமூலத்தைச் சிறிது சவதானமாகக் கேளுங்கள். பளிங்கு போன்ற உங்கள் திருவுள்ளத்துக்கு உண்மை விளங்கும். எனக்கு சங்கீதத்தில் அதிகம் பிரியம். நான் தோல் பையில் தண்ணீர் கொணரும்போது எதிர்வீட்டில் ஒரு நடனமாது ஜன்னலில் நின்று இன்னிசை பாடிக் கொண்டிருந்தாள். இசையென்றால் பசுவும் சிசுவும் பாம்பும் கூட ஈடுபடுகின்றன. தங்கள் ஆட்சியில் உள்ள [குடிமகனாகிய நான் இசையில் ஈடுபடாமல் இருக்க முடியுமா? அவள் பாடலைக் கேட்டு என் மனம் பாட்டில் சென்றுவிட்டது. தோல் பையும் ஓட்டை. அதனால் நீர் அதிகம் ஒழுகி விட்டது. எனவே இக்குற்றத்துக்கு முற்றிலும் உரியவள் நடனப் பெண்தான்" என்று கூறிவிட்டு சிறிது புல்லாங்குழலை ஊதினான்.

அரசன் ஆணைப்படி அவனை விடுதலை செய்தார்கள். தன் வீட்டில் அலங்கரித்துக் கொண்டிருந்த நடனப் பெண்ணை இழுத்து வந்தார்கள்.

அரசன் "ஏ நடனமாதே! நீ பாடியதால் இவன் தண்ணீர் அதிகமாக விட்டான். அதனால் சுண்ணும்பு உறுதியின்றி சுவர் விழுந்து இவன் கால் பழுது பட்டுவிட்டது. உனக்குத் தூக்குதண்டனை விதித்திருக்கின்றேன்" என்றான்.

அச் சிறு பெண் ஒன்றும் கூறத் தெரியாமல் விழித்து நின்றாள்.

"ம்" என்று அரசன் காவலரை அதட்டினான். சேவகர்கள் ஒரு குற்றமும் செய்யாத அந்த இளஞ் சிறுமியை இழுத்துக் கொண்டு போய் தூக்குமேடைமீது நிறுத்தினார்கள். அவள் தன் உயிர் பிரிவதைக் குறித்துத் "தெய்வமே! தெய்வமே!" என்று கூவியழுதாள்.

அவள் கழுத்தில் தூக்குக் கயிற்றின் சுருக்கை மாட்டினார்கள். சுருக்குப் பெரிதாகவும், அவள் மெல்லிய உடம்பின் கழுத்துச் சிறியதாகவும் இருந்தன.

என்ன செய்வதென்று அறியாது திகைத்தார்கள். இவள் கழுத்தை எப்படிப் பெரிசு பண்ணுவது? என்று ஆலோசித்தார்கள்.

நீதி விசாரணை முடித்துவிட்டு சபை கலைந்து அரசன் முதலியோர் தத்தம் இருப்பிடம் போய் விட்டார்கள்.

சேவகர்கள் ஓடி தங்கள் மேல்அதிகாரியிடம் கூறினார்கள். அந்த அதிகாரி அமைச்சனிடம் போனான்! மந்திரி சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தான். "அமைச்சர் ஐயா! சுருக்குக் கயிறு பெரியது;

அந்தப் பெண் கழுத்து சிறியது. என்ன செய்வது? என்று காவலர்கள் கவலையுறுகின்றார்கள்'' என்றான்.

அமைச்சன், "இந்தச் சின்ன விஷயத்தையெல்லாம் என்னிடம் கூறி ஏன் என் கழுத்தையறுக்கின்றீர்கள்?'' என்று சொல்லி சலித்துக் கொண்டான்.

அமைச்சன் அரசன் இருக்கும் அரண்மனைக்குச் சென்றான். அரசன் ஒரு பெரிய கூடையில் வடைகளை வைத்து ஒன்று ஒன்றாக எடுத்து விழுங்கிக் கொண்டிருந்தான்.

அரசன், "என்ன மந்திரீ! வீட்டில் யாராவது இறந்து போனார் களா? ஏன் கவலையுடன் வந்து நிற்கின்றாய்? விஷயத்தை விளக்க மாகச் சொல்'' என்றான்.

"அன்புள்ள அரசர் மணியே! இந்த வழக்கு இன்று நடந்ததே. இது பெரிய தலைவலியைத் தருகின்றது. இத்தனை நேரம் நீரும் நானும் சிரமப்பட்டு இருந்து தருமநெறி தவறாமல் நீதி வழங்கினோம். ஆனால் ஒரு தருமசங்கடம் இப்போது நேர்ந்துளது; இன்று நாம் கூறிய நியாயத் தீர்ப்பு நிறைவேற்ற இயலாத ஒரு வில்லங்கம் ஏற்பட்டுளது. அதனால்தான் விசனிக்கின்றேன். இன்று நாம் மதியால் கூர்ந்து உணர்ந்து அளித்த தீர்ப்பு இன்று நிறைவேற்ற முடியாது. காரணம்? தூக்குக்கயிறு பெரிய வளையம் உடையது. அப்பெண்ணின் ஒல்லியான கழுத்து சிறியது. ஆகவே அவளுக்கு நாம் நல்ல சத்தான உணவுகளைக் கொடுத்துப் பருக்க வைத்துத்தான் தூக்குப் போடவேணும். தங்கள் திருவுள்ளப்பாங்கு யாதோ?'' என்றான்.

அப்போது பருத்துக் கருத்துள்ள அரசி தட்டுத் தட்டுக்களாக பலகாரங்களைக் கொணர்ந்து பார்த்திபன் முன் படைத்தாள்.

பிருஹத் மூட பஹதூர் மன்னர் இடி இடி என்று 32 பற்களும் தெரியச் சிரித்தான்.

"என்ன அமைச்சரே! நீர் சுத்த மக்குப் பிண்டமாக இருக் கின்றீர். அவளைப் பருக்க வைப்பது என்பது சுலபமான காரியமா? கயிறுக்கு ஏற்ற ஒரு ஆளைக் கண்டுபிடித்து உடனே நீதி வழங்கு வீராக. சீக்கிரம்'' என்று உரத்துக் கூறினார்.

மந்திரி கட்டளையிட்டான். "காவலர்களே! இனி கவலைப்பட வேண்டாம். நீங்கள் ஓடித் தேடிகயிற்றுச் சுருக்குக்கு ஏற்ற ஒரு ஆளைக் கண்டுபிடித்து நம் மன்னர் பெருமானுடைய ஆணையை நிறைவேற் றுங்கள்'' என்றான்.

காவலர்கள் பருத்த ஆளைத் தேடித் திரிந்தார்கள். மடாலயத்தின் திண்ணையில் சிற்றானைக் குட்டிபோல் அமர்ந்து இருந்த மூடச் சீடனைப் பார்த்து ஆனந்த பரவசம் ஆனார்கள். இவன்தான் சுருக்குக்கு ஏற்ற வன்'' என்று கூறி அவனைக் கெட்டியாகப் பிடித்து தூக்குமேடைக்கு அருகில் கொண்டு போய் நிறுத்தினார்கள்.

சீடன் ஒன்றும் புரியாது திகைத்தான். “நான் என்ன குற்றம் செய்தேன்? என்னை ஏன் தூக்கில் இடுகின்றீர்கள்?'' என்று கேட்டான்.

காவலர் “ஏய்! அரசன் உத்தரவு. இந்தப் பெண்ணைத் தூக்கில் இடவேணும், சுருக்குக் கயிற்றுக்கு இவள் கழுத்து ஏற்றதாக இல்லை. ஆதலால் கயிற்றுக்கேற்ற பருத்த ஒருவனைத் தூக்கிலிடுமாறு மன்ன ருடைய கட்டளை'' என்றார்.

சீடன் அப்போது விலாப்புடைக்க உண்டு உடலை வளர்த்த குற்றத்தை யுணர்ந்து குருநாதனை நினைந்து கண்ணீரால் நனைந்தான்.

மடத்தின் ஒடுக்கத்தில் நிஷ்டையில் இருந்த குருநாதர் யோக திருஷ்டியால் விஷயங்களை உணர்ந்தார்.

பரம கருணைக் கடலாகிய அவர் பரிந்து ஓடி வந்தார்.

தூக்கில் இடுந்தருணத்தில் கஜேந்திரனைக் காக்க வந்த கரிய பெரிய பெருமாள் போல் வந்து “நிறுத்து'' என்றார்.

காவலர் மகானுடைய சொல்லைக் கேட்டு அஞ்சி நின்றார்கள். ''காவலர்களே! இவனைத் தூக்கில் இடவேண்டாம். என்னைத் தூக்கில் இடுங்கள்'' என்று கூறினர். குருநாதர் அந்த நகரில் நடைபெறும் கொடிய ஆட்சி மடிய வேண்டும் என்று திட்டமிட்டார்.

''எனக்காக என் குருநாதரைத் தூக்கில் இடவேண்டாம். என்னையே தூக்குப் போடுங்கள்'' என்றான். இப்படி இருவரும் போட்டி போட்டார்கள்.

காவலர்கள் முனிவருடைய தோற்றத்தாலும் ஏற்றத்தாலும் உள்ளம் உலைந்தார்கள். அரசனிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறி னார்கள்.

அரசன் “இது என்ன பெரிய வில்லங்கமாகப் போயிற்றே'' என்று அங்கலாய்த்துக் கொண்டு, அமைச்சரையும் அழைத்துக் கொண்டு தூக்குமேடையிடம் வந்தான்.

முனிவரரைக் கண்டு வணங்கினான்; அருந்தவ முனிவர், “புத்தி யில் ஆதவனே! தாமதம் இன்றி என்னைத் தூக்கில் இடுவாயாக. நேரம் ஒரு கணம்கூடத் தாமதிக்கக் கூடாது'' என்றார்.

"இல்லை என்னையே தூக்கிலிட வேண்டும்" என்றான் சீடன்.

மூடர் திலகமாகிய முடிமன்னன் ஒன்றும் உணராமல் திகைத்தான், தூக்கில் சாக இவர்கள் ஏன் ஒருவரை ஒருவர் போட்டியிடுகின்றார்கள்? இதற்கு ஏதோ ஒரு தகுந்த காரணம் இருக்கவேண்டும்" என்று எண்ணினான்.

"குருதேவா! தூக்கில் இடுவதற்கு ஏன் இருவரும் விரும்புகின்றீர்கள்! விளங்கச் சொல்லுங்கள்" என்றான்.

"அரசர் கோமானே! இது ஒரு சுபமுகூர்த்தம். இப்படியான நேரம் கிடைப்பது அரிது. இந்த சுபவேளையில் தூக்கில் இடப்பட்டவன் தேவேந்திர பதவி பெறுவான். ஆதலால் நான் இந்திரபதம் பெற விரும்புகின்றேன். இந்த லக்கினம் தவறக் கூடாது. ஆனபடியால் என்னைத் தூக்கில் இடவும்" என்றார் முனிவர்.

இராஜராஜ ப்ருஹத் மூட பஹதூர் என்ற மன்னன், குருதேவரை வணங்கினான். "சுவாமி! நீர் துறவி. நீர் இந்திரபதவி பெற விரும்புவது முறையன்று. நான் அந்த பதவி பெறத் தகுதியுள்ளவன். ஆதலால் காலம் தாழ்க்காமல் என்னைத் தூக்கில் இடுங்கள். எனக்கு இந்த மதிநலம் மிகுந்த மந்திரியே அங்கும் மந்திரியாக வரவேணும். ஆகவே அடுத்து இவரைத் தூக்கில் இடுங்கள்" என்றான்.

குருநாதர், "உமது விருப்பத்தைத் தடுக்கவல்லார் யார்?" என்றார்.

அரசன் தூக்குக் கயிற்றைக் கழுத்தில் மாட்டிக் கொண்டான். அவன் உயிர் பறந்து போயிற்று. அமைச்சனும் அவ்வாறே ஆனான்.

முனிவர் சிறந்த ஒரு அரசனைத் தேர்ந்து நல்லாட்சி புரியுமாறு நியமனம் புரிந்தார். ஆங்காங்கு உயர்ந்த உத்தம விரிவுரையாளர்களை நியமித்து அறவுரைகள் கூறுமாறு ஏற்பாடு செய்தார். மக்கள் திருத்தமுற்றார்கள். மக்களிடம் அறிவுவொளி வீசத் தொடங்கியது.

ஆதலால் நான் பெற்ற செல்வங்களே! மனிதனுடைய உயர்வுக்குக் காரணம் அறிவுதான். அறியாமையை யகற்றி அறிவை வளர்க்க வேண்டும். இந்தத் தீபாவளி இந்த தத்துவத்தை விளக்குகின்றது" என்று கமலம்மாள் கூறினாள்.

குழந்தைகள் ப்ருஹத் மூட மன்னனுடைய அறியாமையை நினைந்து குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள்.

வள்ளல் பெற்ற வரங்கள்

உலகிலே ஞானிகள் பலர்; அடியார்கள் பலர்; புலவர்கள் பலர்; கற்பரசிகள் பலர், ஆனுல் வள்ளல்கள் சிலர். வள்ளல்கள் இருபத்தொன்று என்ற கணக்கில் அடங்கியவர்கள். முதலேழு வள்ளல், இடையேழு வள்ளல்; கடையேழு வள்ளல் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பேசப்பட்டவர்கள்.

இந்த வள்ளல்கட்கும் முடிமணியாக விளங்கிய வள்ளல் ஒருவர் இருந்தார். அப்பெருமகனுர் யார்? சிந்தனையாளர்கட்கு விளங்கும். அவர்தான் ஸ்ரீராமபிரான்.

இராமரைப்பற்றிக் கம்பநாடர் பல இடங்களில் "வள்ளல்" "வள்ளல்" என்றே கூறுகின்ருர். சில இடங்களை மட்டும் குறிப்பிடுகின்றேன்.

மிதிலையிலே ஜனகருடைய வேள்விச் சாலையிலே சிவதநுஸின் பெருமையை சதானந்தர் கூறினுர். அப்போது விசுவாமித்திரர், புனைந்த சடை முடிதுளக்கி இராகவனை நோக்கினுர்.

"வனைந்தனைய திருமேனி வள்ளலும் அம்மாதவத்தோன்
நினைந்தவெலாம் நினைந்தந்த நெடுஞ்சிலையை நோக்கினுன்"

இந்த இடத்தில் இராமரை வள்ளல் என்று குறிப்பிடுவதைக் காண்க.

வில்லைக் கொணர்ந்து இராமர் முன் வைத்தபோது, மிதிலைப் பெண்மணிகளும் இராமரை வள்ளல் என்றே வியந்து கூறினுர்கள்.

வள்ளல் மனத்தை மகிழ்ந்தனன் என்ருல்
கொள்ளெனமுன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்திப்
பிள்ளைமுன் இட்டது பேதைமை யென்ருர்.

சீதாபிராட்டியார் திருமணம் ஆனவுடன் ஜனகர் தனது தம்பி குசத்துவசருடைய புதல்வியரை இராமருடைய தம்பிய

ருக்குத் தர இசைகின்றார். அந்த இடத்திலும் இராமரை வள்ளல் என்றே வசனிக்கின்றார்.

வள்ளல் தனக்கிளையோர்கள் தமக்கும்
எள்ளலில் கொற்றவன் எம்பியளித்த
அள்ளன் மலர்த்திரு அன்னவர் தம்மைக்
கொள்ளும் எனத்தமரோடு குறித்தான்.

கைகேயி தயரதரைப் பார்த்து "முன்தந்த வரங்கள் இரண்டையும் தரவேண்டும்" என்றாள்.

அப்போது தயரதர் சிரித்து, "கேகயன் பெற்ற மாமயிலே! அந்த வரங்கள் இரண்டையும் தருவேன். உலோபஞ் செய்யேன். உன் மகனாகிய வள்ளல் இராமன்மீது ஆணை" என்றார்.

"உள்ளம் உவந்துள செய்வன் ஒன்றும் லோபேன்
வள்ளல் இராமன் உன்மைந்தன் ஆணையென்றார்"

விராதன் இராமரைத் துதி செய்யும்போதும் "ஏ வள்ளலே!" என்று விளிக்கின்றான். அழகான இன்தமிழ்க் கவி.

கள்ளமாய வாழ்வெலாம்
விள்ள ஞானம் வீசுதாள்
வள்ளல் வாழி கேள்எனா
உள்ளவா றுணர்த்தினான்.

சூர்ப்பணகைப் படலத்திலும் இராமர் சந்தியாவந்தனம் செய்கின்றபோது கம்பர் "வள்ளல்" என்றே குறிப்பிடுகின்றார்.

"......வள்ளல் போய் ஒரு மணித் தடத்தான்
சந்தி நோக்கினன்"

கரன் இராமர் மீது அம்புமழை பொழிந்தபோதும் வள்ளல் என்றே குறிப்பிடுகின்றார்.

"கள்ளவமர் மாயவினை கல்வியின் விளைத்தான்
வள்ளல் உருவைப்பகழி மாரியின் மறைத்தான்"

ரிச்யமுகமலையில் ஆஞ்சனேயர் இராமனிடம் வாலியின் வரலாற்றைக் கூறும்போது இராமரை "வள்ளலே" என்று வாய் மணக்க அழைக்கின்றார்.

வெள்ளம் ஏழுபத் துளது; மேருவைத்
தள்ள லானதோள் அரிகள் தானையான்

உள்ளம் இன்றியவ் வுயிரை யஞ்சலால்
வள்ளலே யவன் வாழ வாழுமால்.

உயுத்த காண்டத்திலே, இராமர் தென்கடலிடம் சென்றார். கடல் மங்கை, "ஏ ராமா! நான் பெற்ற செல்வப் பாவையைப் பிரிந்து நீ தனிமையாக வந்திருக்கின்றனையே" என்று கூறி முத்துக்களாகிய கண்ணீர்த் துளிகளைச் சிந்தி அலையுடன் எழுந்து வந்து வள்ளலாகிய இராமருடைய மலர்த்தாளில் வீழ்ந்தாள்.

"சிந்துகின்ற நறுந்தரளக்
கண்ணீர் ததும்பித் திரைத்தெழுந்து
வந்து வள்ளல் மலர்த்தாளின்
வீழ்வ தேய்க்கும் மறிகடலே"

என்று கம்பர் அழகாகக் கூறுகின்றார்.

முதல்நாள் போரில் இராவணன் நால்வகைப் படையுடன் வெண்கொற்றக் கொடையுடன், வீறுடன் கூடிய நடையுடன் வந்தான். அண்ணல் இராமருடைய அம்புகளால் அத்தனையும் இழந்தான். படைகளை யிழந்தான்; கொற்றக் குடையிழந்தான்; படைக்கலங்களை யிழந்தான்; தேர் இழந்தான்; வீரன் என்ற பேர் இழந்தான். இராமருடைய பெருங் கருணையால் உயிர்மட்டும் இழந்தானில்லை.

அறத்தினின்றும் வழுவினவர்கள் அடைகின்ற கதி இது என்று உலகெலாம் அறிந்து ஆரவாரஞ் செய்தன. இராவணனுடைய நிறங் கருகியது; கால் பெருவிரலால் நிலத்தைக் கீறிக் கொண்டு நாணிக் கோணி நின்றான். அவன் கண்கள் கீழே நோக்கின; முகத்தில் ஒளி மழுங்கியது. இருபது கரங்களையும் தொங்கவிட்டு விழுதுடன் கூடிய ஆலமரம்போல் நின்றான்;

அறங்கடந்தவர் செயல் இஃதென்றுலகெலாம் ஆர்ப்ப
நிறங்கரிந்திட நிலம்விரல் கிளைத்திட நின்றான்
இறங்கு கண்ணினன்; எல்லழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன்; விழுதுடை ஆல்அன்ன மெய்யன்.

இராவணன் நிற்கின்ற அவலநிலையைக் கவிச் சக்கரவர்த்தி என்ன அழகாகச் சித்திரிக்கின்றார் என்பதைப் பார்த்து மகிழுங்கள்.

இராமர் நினைத்தால் ஒரு கணையினால் அவனுடைய பத்துத் தலைகளையும் பனம்பழங்களைப்போல் பாரிடைத் தள்ளியிருப்பார். அவர் பரம கருணாமூர்த்தி. இளைத்து நின்றவனைக் கொல்லுவது அறம் அன்று என்று திருவுளங்கொண்டார். இராமனுடைய மலர் வாக்கிலிருந்து குளிர்ந்த தேன்போன்ற சொற்கள் வெளிவருகின்றன.

"பாவி! மான் அனுப்பி வஞ்சனை செய்து நானும், இளையவனும் இல்லாதபோது போலி சந்நியாசியாக வந்து அன்னம் இட வந்தவளைக் கன்னம் வைத்தாய். ஒரு அபலையை அநியாயமாகச் சிறைவைத்தாய். இது அறம் ஆகுமா?

அமரர்களேயானாலும் அறத்தினாலன்றி பாவமார்க்கத்தால் வெற்றி பெற மாட்டார்கள். இதனை நீ இப்போது எண்ணிப் பார். பழியுடன் உனது நகரம் போகவேண்டும் என்று பறக்கின்றாய்; உன்னை ஒரு கணையால் கொல்ல என்னால் ஆகும். தேய்ந்த சந்திரனை இராகு கேதுக்கள் பீடிப்பதில்லை. ஓய்ந்திருக்கின்ற உன்னைக் கண்டு இரங்குகின்றேன். உன்னை நான் இப்போது சித்ரவதை செய்யமாட்டேன்.

உன்னைச் சார்ந்த அரக்கர் பெருங்குலத்தோடும், உறவினரோடும், உனக்கு உதவும்படி நீ அரிதில் தேடி அடைந்து வைத்துள்ள ஆயுதங்களோடும் ஆற்றல் உள்ளவனானால் திரும்பி வந்து என்னுடன் போர் செய்; அல்லது எங்காவது ஓடி ஒளிந்துகொள்; நீ பிழைக்க விரும்பினால் சிறையில் வைத்த சீதையை விடுத்து, உன்னால் பதவியிழந்த தேவர்களை அவரவர்கள் நிலையில் இருக்குமாறு செய்து, உன் தம்பி விபீஷணனை அசுரர்கட்கு அரசனாக்கி, நீ அவனுக்கு ஏவல் செய்து வாழவேண்டும். இவ்வாறு செய்வாயானால் நான் உன் தலையை அம்பினால் தடிந்து தரையில் வைக்கமாட்டேன்.

அறத்தினாலன்றி அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்
மறத்தினால் அரிதென்பது மனத்திடை வலித்தி
பறத்தி நின்னெடும் பதிபுகக் கிளையொடும்பாவி!
இறத்தியானது நினைக்கலன் தனிமைகண்டிரங்கி.

உடைப் பெருங்குலத் தவரொடும் உறவொடும் உதவும்
படைக் கலங்களும் மற்றும்நீ தேடிய பலவும்
அடைத்து வைத்தன திறந்துகொண்டு ஆற்றுதியாயின்
கிடைத்திர் அல்லையேல் ஒளித்தியால்; சிறுதொழில் கீழோய்!

சிறையில் வைத்தவள் தன்னைவிட்டு உலகினில்தேவர்
முறையில் வைத்துநின் தம்பியை இராக்கதர் முதற்பேர்
இறையில் வைத்துஅவற் கேவல் செய்திருத்தியேல் இன்னும்
தறையில் வைக்கிலென் நின்தலை வாளியில் தடிந்து.

இவ்வாறு இயம்பிய இராமர் பின்னும் கூறுகின்றார்.

ஆளையா! உனக்கமைந்தன மாருதம் அறைந்த
பூளையாயின; கண்டனை; இன்றுபோய்ப் போர்க்கு
நாளைவா என நல்கினன்; நாகிளம் கமுகின்
வாளைதாவுறு கோசல நாடுடை வள்ளல்.

எம்பெருமானுடைய முழு வள்ளல் தன்மை வெளிப்பட்டு நிற்கின்ற இடம் இது.

ஒருவன் தனது நண்பர்கட்கும் உறவினர்கட்கும் அடிய வர்கட்கும் உதவுவது வள்ளன்மை யாகாது. அது கட்டுப் பாடாகும். கொடும் பகைவர்கட்கு உதவுவது சிறந்த வள் ளன்மையாகும்.

ஸ்ரீராமர் தன் தருமபத்தினியைப் பத்து மாதங்கள் சிறை வைத்த மகா பாதகனுக்கு உயிரை வழங்கினார். ஆதலால் இப்பாடலின் இறுதியில் முடிமணி வைத்ததுபோல "கோசல நாடுடை வள்ளல்" என்கின்றார் கம்பர்.

இனி இந்தப் பாடலில் இராமர் கூறும் இனிய மொழிகளைச் சிந்திப்போம்.

"ஆளையா!" என்றார். ஆன்றோர் எதிர்க்கட்சித் தலைவர் களைக்கூடத் தரக்குறைவாகப் பேசமாட்டார்கள்.

"ஆள் ஐயா!" என்றால், என்ன பொருள்? இலங்கையை ஆளுகின்ற ஐயா! என்றார். அவன் இலங்காதிபதியல்லவா? ஆதலால் "ஆளையா" என்றார். தமிழில் உயர்ந்த சொல் "ஐயா" என்ற சொல்.

"வேதங்கள் ஐயா என வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணி யனே" என்பது திருவாசகம்.

மற்றொரு பொருள் :—

"ஆள் ஐயா!" பரதார கமனந்தான் பாவங்களுக்கெல்லாந் தலையாய பாவம்.

அறன்கடை நின்ருருள் எல்லாம் பிறன்கடை
நின்ருரின் பேதையார் இல். —திருக்குறள்.

"இராவணா! நீ பிறன் மனை விழைந்த பாவத்தால் நரகத்தைச் சென்று ஆள்".

இன்னெரு பொருள்:—

"ஆள் ஐயா!"

எச்சரிக்கை செய்து வந்து என்னையும் இலக்குவனையும் வென்று சீதையைச் சிறை பிடித்திருந்தால் நீ வீரன். நாங்கள் இல்லாதபோது கள்ளனைப்போல வந்து அபலையாய அரிவையைச் சிறை பிடித்தனையே? நீ நல்ல ஆளையா?" என்று பரிகசிப்பதுபோல அமைந்திருப்பதை உன்னுக.

வேறும் ஒரு பொருள்:—

"ஆளையா!"

இனி அரசனுக இருக்கத் தகுதியில்லை; எனக்குப் பணி செய்யும் ஆள் ஐயா."

பிறிதொரு பொருள்:—

"ஆளையா!"

ஒருக்கால் சீதையுடன் வந்து நாளைச் சரணுகதியடைந்தால், இலங்கையை உன் தம்பி வீடணனுக்கு வழங்கிவிட்டேன். உனக்கு கமுகில் வாளைமீன் தாவி விளையாடும் வளமை மிகுந்த என்னுடைய கோசல நாட்டைத் தருகின்றேன். ஆகவே இனி நீ கோசலநாட்டை ஆளையா" என்னும் பொருள்படக் கூறினுர். இதில் ஐந்து பொருள்கள்படுமாறு பாடிய கம்பருடைய கவித்துவத்தைக் கருதுங்கள்.

"ஐயா! உனக்கு உரியனவாக இருந்த பூந்தொடை பூச்சக்கரக் குடை முதலிய அனைத்தும் சூறவளிக் காற்ருல் பூளைப் பஞ்சுபோல் பறந்து போய்விட்டன; இது கண்கூடாகப் பார்த்தாய்; ஆதலால் இன்று போய் நாளை வா" என்ருர்.

நல்கினன். எதனை நல்கினுர்? அவாய் நிலையாக உயிரைக் குறிக்கின்றது. பரம சத்துருவுக்குக் காகுத்தர் கருணையினுல் உயிரை வழங்கினுர். கடைசி வரியில் நாகிளங் கமுகின்

வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்'' என்ற சொற்றொடரின் உட்பொருள் யாது?

ஒருக்கால் இராவணன் சீதையுடன் வந்து தன்னைத் தஞ்சம் புகுவானாயின், இலங்கையை விபீஷணனுக்கு அளித்தபடியால் அந்த சத்திய வாக்கு தவறாதிருக்கும் பொருட்டு, தமக்கு உரிய கோசலநாட்டை இராவணனுக்குத் தந்துவிட இராமர் முடிவுகட்டி யிருந்தார் என்ற குறிப்பை இது உணர்த்துகின்றது.

இராமருடைய கருணைத்திறமும், வள்ளன்மையும் இங்கே நன்கு தெளிவாகின்றது.

தசரதர், கைகேயி வரத்தால் இராமர் கானகம் போவது கண்டு "இராமா! உன் வள்ளல்தனத்தால் இது விளைந்தது" என்று கூறுவதனாலும் காண்க.

இதுவரை பலப்பல இடங்களில் இராமரை வள்ளல் என்று கூறுவதைச் சிந்தனை செய்தோம். இனி இத்தகைய வள்ளல் வரம் யாரிடம் பெற்றார்? என்ன வரம் பெற்றார்? எப்போது பெற்றார்? என்ற ஐயங்கள் நிகழும். இனி அந்த இனிய பகுதியைச் சிந்திப்போம்.

இராமருக்கும் கைகேயி மீது மிகுந்த அன்பும் மதிப்பும் உண்டு. திருமண காலத்தில் முதலில் கைகேயியைத்தான் வணங்கினார்.

"கேகயன் மாமகள் கேழ்கிளர் பாதம்
தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கா"

இனி இராமருடைய புகழுக்குக் கைகேயிதான் காரணம். கைகேயி தீயவள் அல்லள்; தூயவளேயாகும். கற்கண்டில் வேப்பெண்ணை தடவப்பட்டது போல் கூனியின் கோளுரையால் கைகேயியின் மனம் நிலைகுலைந்தது.

கைகேயியைப்பற்றி அறிவின் சிகரமாகிய அநுமார் சுக்ரீவனிடம் கூறும் இடத்தைக் காண்க.

"அளவில் கற்புடைய சிற்றவை பணித்தருளலால்
வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திருவெலாம்
இளையவற் கருளியித் தலையெழுந் தருளினன்"

கைகேயி நற்குணம் அமையப்பெருத நங்கையாக இருந்திருப்பாளாயின் தருமமூர்த்தியான தசரதர் பல ஆண்டுகள் அவளுடன் அன்பாக வாழ்ந்திருக்கமாட்டார்.

கைகேயி தன் மகன் பரதனைப் பார்க்கினும் இராமபிரானை அதிகமாக நேசித்தாள்.

கூனி கைகேயியைப் பார்த்து, "கைகேயி! அயோத்தியிலே பகைவந்து உன்னை இடர்ப்படுத்தும் இவ்வேளையில் நீ உறங்கலாமோ?" என்றாள்.

அப்போது கைகேயி கூறினாள். "கூனி! உலகங்கள் எல்லாவற்றுக்கும் வேதம்போல் விளங்கும் இராமனை மகனாகப் பெற்ற எனக்கு இடர் எய்துமோ?" என்றாள்.

"விராவரும் புவிக்கெலாம் வேதமேயன
இராமனைப் பயந்தஎற் கிடருண்டோ"

கூனி செய்த கோளால் கைகேயி மனம் மாறியபோது "அவள் மனம் மாறியதற்குக் கூனியின் கோளுரை மட்டுமே காரணம் அன்று. அரக்கர் செய்த பாவமும், உத்தமர்கள் செய்த தருமமும் தூண்ட அவள் உள்ளந்திரிந்தது" என்கின்றார்.

அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூய்மொழி மடமான்
இரக்கம் இன்மையன்றோ இன்றிவ் வுலகங்கள் இராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின்றதுவே.

இப்பாடலில் கைகேயியை கவிமன்னர் "தூய்மொழி மடமான்" என்று புகழ்ந்துரைப்பதைக் கருத்தில் இருத்துக.

இராமர் திருவவதாரஞ் செய்த நோக்கம் இராவண வதமாகும். இதற்குத் துணை செய்தவள் கைகேயி. இது தேவ காரியத்துக்கு உதவியதாகும்.

இந்த உண்மையறியாத தயரதர் மகன்மீதுள்ள பாசத்தால் உள்ளம் வெந்து நொந்து, கைகேயியைப் பார்த்து, "நீ என் மனைவியல்ல, பரதன் என் மகன் அல்லன்; உம் இருவரையும் துறந்துவிட்டேன்" என்று சபித்தார். எதிரில் நின்ற பிரமரிஷியாகிய வசிட்டர் திருமுன் அவரைச் சாட்சியாக வைத்து இதனைச் செய்தார்.

இன்னே பலவும் பகர்வான் இரங்காதானை நோக்கிச்
சொன்னேன் இன்றே இவள்என் தாரம்அல்லள்; துறந்தேன்
மன்னே யாவான்வரும் அப்பரதன்தனையும் மகன்என்று
உன்னேன் முனிவா! அவனும் ஆகான் உரிமைக் கென்றான்.

இராமர் இராவணவதம் முடிந்தபின் சீதையை தீயில் முழுகுவித்து ஏற்றுக்கொண்டார். இனி அயோத்திக்குப் போக வேண்டும். போனால் முதலில் கைகேயியை வணங்கவேண்டும், தயரதர் அவளை மனைவியல்லள் என்று துறந்துவிட்டபடியால் "அம்மா" என்று அழைத்து வணங்க இயலாது. அவ்வாறு வணங்கினால் தந்தை சொல் தட்டியதாகும். பரதனையுந் தம்பி யென்று அழைக்க இயலாது. இப்படியான ஒரு தருமசங்கடம் இராமருக்கு நேர்ந்துளது. இந்த வில்லங்கத்தை விலக்க தயரதர் ஒருவரால்தான் முடியும்.

பதினான்கு ஆண்டுகள் கானகத்தில் பஞ்சு படாதபாடு பட்டுச் சீதையைப் பிரிந்து இராவணாதியருடன் போர் புரிந்து துன்புற்றார். இத்தனைக்கும் மூலகாரணம் கைகேயியேயாகும். இராமர் அந்த அன்னைக்கு நேர்ந்த சாபத்தை நீக்கத் திட்டம் இட்டார்.

இராமரைக் காண விண்ணுலகில் இருந்து விமானமீது, விபுதர்கள் சேவிக்க தயரதர் வந்தார். இராமர் அவரை வணங்கினார். தயரதர் மகனைத் தழுவி மகிழ்ந்தார்.

தயரதர் "என் அரும் பெருந்தவக் கொழுந்தே. உன்னால் நான் உயர்வு பெற்றேன். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்; தருவேன்" என்றார்.

தயரதனுக்கு வரந்தருகின்ற வழக்கம் புண்ணியலோகம் போயும் மாறவில்லை. முந்தி கைகேயிக்கு வரந் தந்துதானே இத்தனை இடர்களும் நேர்ந்தன. இப்போதும் வரந்தருவேன்; கேள் என்றார்.

இராமர் தனக்குள் நினைக்கின்றார். நாம் அயோத்தி போய் கைகேயியை வணங்கவோ அம்மா! என்று அழைக்கவோ இயலாது. தந்தையால் தள்ளப்பட்ட கைகேயியையும் பரதனையும் மகுடாபிஷேக விழாவில் ஒதுக்கிச் செய்வது எவ்வாறு முடியும்? அவர்களை ஒதுக்காவிட்டால் பிதாவின் சொல் கடந்

தநாக ஆகும். இப்போது இதற்கு நிவாரணம் தேடவேண்டும்'' என்று கருதினர்.

இராமர் தந்தையிடம் வரம் கேட்கலானர். கேட்கும் வரம் தனக்கென்று இருக்கக்கூடாது. பிறருக்கு என்று அமைய வேண்டும். கேட்கின்ற வார்த்தைகளில் பிழை வரக்கூடாது.

"அப்பா! நீர் கைகேயியை அங்கீகரித்துக்கொள்ளும்" என்று சொல்வது உசிதமாகாது. தந்தைக்குக் கட்டளையிட்டதாகும். அன்றியும் இவருக்கு வரமாகவும் ஆகாது. "என் அன்னையை அங்கீகரித்துக்கொள்ளும்" என்றுங் கூறக்கூடாது. தயரதருக்கு அவள் மனைவியாக ஆனால்தானே இராமருக்கு அன்னையாக முடியும்? ஒரு பெரிய தருமசங்கடம். கைகேயி என்றும் கூறுதற்கில்லை. அன்னையென்றும் கூறுதற்கில்லை. நீர் அவரைச் சேர்த்துக்கொள்ளும் என்றும் கூறுதற்கில்லை; இராமர் அறிவின் சிகரம். எப்படிக் கூறினர்.

"தீயள் என்றுநீ துறந்தவென் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருகெனத் தாழ்ந்தான்.

"அப்பா! தேவரீர் தீயள் என்று விலக்கிய என் தெய்வம்'' என்றுர். அவரை நான் அன்னை என்று கூறுதற்கில்லை. ஆனால் தெய்வம் என்று கூறுவதில் பிழையில்லை. அத்தெய்வம் எனக்கு அன்னையாகவும், அத்தெய்வத்தின் மகன் எனக்குத் தம்பியாகவும் விளங்கும் வரத்தை, வழங்குவீர் என்றுர். இவ்வாறு இராமர் இயம்பியவுடன் அவருடைய சொற் சாதுர்யத்தையும் பரம காருண்யத்தையும் கண்ட சராசரங்கள் எல்லாம் வாய்திறந்து இராமரை வாழ்த்தி ஆரவாரம் செய்தன.

ஆயினும் உனக்கமைந்த தொன்றுரை யெனஅழகன்
தீயள் என்றுநீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருகெனத் தாழ்ந்தான்
வாய்திறந் தெழுந்தார்த்தன உயிரெலாம் வழுத்தி.

இராமருடைய பொன்னுரையைக் கேட்ட தயரதருக்கும் இன்னும் கைகேயி மீது இருந்த சீற்றந் தணியவில்லை. ஆதலால் "மகனே! பரதன் உனக்குத் தம்பியாக விளங்கட்டும். உன் மணிமுடியைப் பறித்துச் சடைமுடி தந்து பட்டுடை பறித்து மரவுரி தந்த பாவியாகிய கைகேயியை நான் மன்னிக்க மாட்டேன்'' என்றுர்.

இராமர் கருணையே ஒரு உருவாய் "தந்தையே! அரசுபுரிய நான் இசைந்தது என் பிழைதானே. அது என் பிழையே யல்லாது எம்பிராட்டியின் பிழையிதில் இல்லையே" என்றார்.

ஊன்பிழைக்கிலா உயிர்நெடி தளிக்குநீ ளரசை
வான்பிழைக்கிது முதலென தாள்வுறமதித்து
யான்பிழைத்த தல்லால் என்னையீன்ற எம்பிராட்டி
தான்பிழைத்த துண்டோ என்றான் அவன் கலந்தவிர்ந்தான்.

இக்கவியின் உட்கருத்துக்களைச் சிந்திக்க வேண்டும்.

ஊனுடன் கூடிய உயிர்களையெல்லாம் காக்கும் அரசைப் பெரிதாகக் கருதி அரசபதவிக்கு நான் இசைந்தேன். அதுதான் பிழை. வான்பிழைக் கிது முதல்"

உயர்ந்த பிழைக்கு இது மூலமாகும் என்பது ஒரு பொருள். நான் வந்தது ராவணவதம் பொருட்டு. அதை விடுத்து அரசு செய்ய இசைந்தது வான்பிழைக்கு மூலமாகுமன்றோ? தேவ காரியம் நிறைவேறாது பழுதுபடுமன்றோ? என்ற பொருள் இதற்குள் மறைந்திருப்பதை உய்த்துணருங்கள். இதனை யுணர்ந்த பின்னரே தயரதர் சினந் தணிந்து இராமருக்கு மனந் துணிந்து இரு வரங்களையும் ஈந்தார்.

அப்போது வானோர்கள் "தயரதர் கைகேயியம்மையாருக்கு ஈந்த வரங்களும் இரண்டு. இப்போது இராமருக்கு ஈந்த வரங்களும் இரண்டு" என்று பேசிக்கொண்டார்கள்.

எவ்வரங்களும் கடந்தவன் அப்பொருள் இசைப்பத்
தெவ்வரம்பறு கானிடைச் செலுத்தினாட் கீந்த
அவ்வரங்களும் இரண்டு; அவையாற்றினாற் கீந்த
இவ்வரங்களும் இரண்டென்றார் தேவரும் இரங்கி.

வரந்தந்து தயரதர் மேல் உலகம் போயினார். இராமர் தாய்க்காகவும் தம்பிக்காகவும் தந்தையிடம் வரம்பெற்று மகிழ்ந்தார்.

இதனால் உலகங்கட்கெல்லாம் வரந்தரும் வரதராகிய வள்ளல் இராமர், பிறர்பொருட்டு வரம்பெற்று பிறர் துயர் போக்கும் பெருங் கருணையாளர் என்பது நன்கு உறுதியாகின்றது.

மகாபாரதம்

அநுசாஸன பர்வம்

(96-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"பர்வதராஜ குமாரியே! எவள் தன் கணவனுக்கு அடங்காமல், அவனுக்குக் கொடுமை செய்து நாணமும் ஆசாரமும் விடுத்து இருப்பாளோ அவள் மறுபிறப்பில் வேசையாகப் பிறக்கின்றாள். தன் கணவனை நஞ்சிட்டுக் கொன்றவள் மறுபிறப்பில் இளமையில் விதவையாகின்றாள். முற்பிறப்பில் வணக்கமின்றி தற்புகழ்ச்சி செய்தவர்கள் மறுபிறப்பில் பிறருக்கு ஏவல் செய்து உழலுவார்கள். கொடுமை பல செய்தவர்கள் மறுபிறப்பில் மலம் எடுப்பவர்களாக இழிதொழிலைச் செய்து ஈனம் எய்துவார்கள். நல்ல காரியங்களைத் தடுக்கின்றவள் மறுபிறப்பில் தொட்டகாரியங்கள் ஒன்றுந்துலங்காமல் துயரமடைவாள். அவரவர்கள் செய்த வினைகளை மறுபிறப்பில் அநுபவித்தே தீர்க்க வேண்டும். தேவர்கள் மட்டும் செய்த வினைப்பயன்களை அப்பிறப்பிலே அநுபவிக்க வேண்டும்.

அரச தண்டனையால், வினைப்பயன் நசிக்கின்றது. அவளுக்கு யம தண்டனை கிடையாது. எந்த மனிதர்கள் முற்பிறப்பில் எந்தக் காலத்தில் எந்தக் காரணத்தினால் எந்த நல்வினையையோ தீவினையையோ எப்படிச் செய்தனரோ அந்த மனிதர்கள் பிற்பிறப்பில் அந்தக் காலத்தில் அந்தக் காரணத்தால் அந்த அந்த வினைப்பயன்களை அப்படியே ஐயமின்றி அடைகின்றார்கள். இதுதான் விதி. நல்வினை செய்தவன் பூதசார உடம்புடன் புண்ணியவுலகம் எய்துகின்றான். தீவினை செய்தவன் பூதமா உடம்புடன் நரகவுலகம் எய்துகின்றனன். கலப்புக் கன்மங்களைச் செய்தவன் பூத பரிணாம உடம்புடன் இந்தவுலகில் இன்ப துன்பங்களை நுகர்கின்றான். வினைகளை நுகராதவன் விண்ணிலுமில்லை; மண்ணிலுமில்லை. தன் வினையைத் தான் அனுபவியாமலிருப்பதற்கு தேவர் அசுரர் மனிதர் எவராலும் முடியாது.

நவக்கிரகம்

உமாதேவியார் "மகாதேவரே! வினைகளின் பயனை உம்மிடம் கேட்டு மகிழ்ந்தேன். உமது உபதேசம் அமுதம்போல் இனிக்கின்றது.

செய்தவினை அழியாது என்பது உண்மை. பசுவின் கன்று தாயையும், நீர் பள்ளத்தையும் நாடிச் செல்வதுபோல் செய்வினை செய்தவனை நாடித் தேடிச் செல்லும். உலகத்தில் நன்மை தீமைகள் அனைத்தும் நவக்கிரகங்களால் வரும் என்று கருதி அந்த ஒன்பது கோள்களையும் நட்சத்திரங்களையும் பெரும்பாலும் வழிபடுகின்றனர். இதன் உண்மையை உரைத்தருளும்'' என்று வினவினர்.

மகேச்சுரர் ''கிரிராஜகுமாரியே! நட்சத்திரங்களும் நவக்கிரகங்களும் மனிதர்களின் நன்மை தீமைகளை அறிவிப்பவை. அவைகள் தாமே காரியங்களைச் செய்பவையல்ல. மனிதர்களின் நல்வினைக்காக அவை நல்லவைகளாகவும், தீவினைக்காக அவை கெட்டவைகளாகவும், செய்தவற்றையும் இனிச் செய்வனவற்றையும் கிரகங்களின் சஞ்சாரம் தெரிவிக்கின்றது. நல்ல கர்மம் சுபக்கிரகங்களால் தெரிவிக்கப்படுகின்றது; தீவினைப் பலன் பாபக்கிரகங்களால் தெரிவிக்கப்படுகின்றது. ஆதலால் கிருக நட்சத்திரங்கள் நன்மை தீமைகளைச் செய்வதில்லை. கிரகங்கள் வேறு; செய்பவன் வேறு. செய்கின்றவன் செய்வினைப் பயனை நுகர்கின்றான். இடைவிடாத சுகம் சுவர்க்கத்தில் உண்டு; அப்படியே துன்பமேதான் நரகில். ஆன்மா நித்தியமானது; உடல் அநித்தியமானது. உடம்பில் உயிர் கன்மங்களை நுகர்ந்து முடிந்தவுடன் உடம்பை விட்டுவிடுகின்றது. இதை மரணம் என்கின்றார்கள். தேவர் மனிதர் அசுரர் யாரும் காலத்தைக் கடக்கமாட்டார்கள். நெய் இருக்கின்ற வரை விளக்கு எரியும்; அதுபோல் வினைகள் உள்ளவரை உடம்பில் உயிர் நிற்கும். அதனால்தான் மரணம் இளமையிலும் வரும்; முதுமையிலும் வரும். உயிர் ஆண் உயிர். பெண்ணுயிர் என்ற வேறுபாடு கிடையாது. உயிர் ஆணன்று; பெண்ணன்று. உயிர்கள் ஆணாகவும் பிறக்கும்; பெண்ணாகவும் பிறக்கும். உடம்பு முக்குணமயமானது. சத்துவ குணத்தின் தன்மைகள் கருணை அன்பு பொறுமை அடக்கம் என்பவை. சத்துவம் ஒளி வடிவானது. இராஜஸ குணத்தின் தன்மைகள் சோம்பலின்மை, முயற்சி, ஆசை கோபம் முதலியவைகள்; தாமத குணத்தின் தன்மைகள் தூக்கம் மயக்கம் சோம்பல் தெய்வ நம்பிக்கையில்லாமை முதலியவை.

சத்துவ குணமுள்ளவன் புண்ணியவுலகில் வாழ்வான்; ரஜோ குணமுள்ளவன் மானிடவுலகில் வாழ்வான்; தமோகுணமுள்ளவன் நரகில் இருப்பான்; மீண்டு குறுக்குப் பிராணிகளாகப் பிறப்பான். செல்வமுள்ளவனும் துன்பப்படுகின்றான்; வறுமையுள்ளவனும் இன்பமாக வாழ்கின்றான். இதற்குக் காரணம் அவரவர்கள் செய்த புண்ணிய பாவங்களேயாகும்.

உலகில் நால்வகைத் தோற்றங்கள் உள; செடி கொடி மரம் புல் பூண்டுகள் உத்பிஜ்ஜங்கள். கொசு பேன் முதலியவைகள் சுவேதஜங் கள்; பறவை பாம்பு முதலியவைகள் அண்டஜங்கள். விலங்கு மனிதன் இவைகள் ஜராயுஜங்கள்.

நிலமும் ஜலமும் சேர்வதனுல் உத்பிஜ்ஜங்கள் உண்டாகின்றன. இவைகட்குப் பரிச அறிவு ஒன்றேதான். தட்பமும் வெப்பமும் சேர்வ தனுல் சுவேதஜங்கள் உண்டாகின்றன. இவைகட்கு இரண்டு அறிவு கள். வீரியம் ஈரத்தில் சேருவதனுல் அண்டஜங்கள் தோன்றுகின் றன. சுக்கிலமும் சுரோணிதமும் சேருவனுல் ஜராயுஜங்கள் தோன்று கின்றன. ஜராயுஜங்களில் மனிதப் பிறப்பு உயர்ந்தது.

இருளில் இருவகையுண்டு. இரவிலே உண்டாகும் புற இருள் ஒளிப் பொருள்களால் அகன்றுவிடும். மனத்திருள் ஒளிப் பொருள் களால் போகாது. பிரமனுக்கும் அப்படித்தான். அது ஞான வொளி ஒன்றினுலேயகலும். ஆதலால் மனிதனுக்கு ஞானத்தை விடச் சிறந்தது மூன்று உலகங்களிலும் இல்லை.

ஞானம் இருவகைப்படும். ஒன்று உடனேயே பிறக்கும். இது இயற்கையறிவு. ஒன்று கற்பிப்பதனுல் உண்டாகும்; இது செயற்கை யறிவு. சிலருக்கு முற்பிறப்பின் நினைவு இருக்கும். சிலசமயங்களில் யம தூதர்கள் ஆள்மாருட்டமாகப்பேர் ஒற்றுமையால் ஒருவனுக்குப் பதி லாக மற்ருெருவன் உயிரைக் கொண்டு போய் விடுவார்கள். அறக்கட வுள் உள்ளதை உள்ளவாறு உணர்பவர். ஆதலால் சம்யமனி என்ற யமபட்டினம் போன உயிரைத் திரும்ப அனுப்பிவிடுகின்ருர். ஆத லால் சிலர் அரிதாகச் செத்த பின் உயிர் பெற்று எழுகின்ருர்கள்.

கனவு மனத்தின் செய்கை. நடந்ததையும் கனவு காண்பர். இனி நடக்க இருப்பதையும் கனவில் காண்பர்.

ஒரு மனிதனுக்கு முயற்சியும் ஊழும் சேர்ந்தே பயனைத் தருகின் றன. உழுவது விதைப்பது போன்றது முயற்சி. மழை பொழிவது போன்றது ஊழ். விதையும் மழையும் சேர்ந்துதான் பயிர் விளைகின் றது. அதுபோல் முயற்சியும் ஊழும் சேர்ந்தே பயன் விளைகின்றது. ஊழில்லையானுல் முயற்சி பயன் தராது. ஆனுல் முயற்சி அவசியம் என்று அறிக. முயற்சிசெய்யாதவனுக்கு ஊழ் துணை செய்யாது.

கீர்த்தியுள்ளவனே! ஆத்மா கண்ணுல் பார்க்க முடியாது. சிலர் உடம்பையே ஆத்மாவாக நினைக்கின்ருர்கள். இறந்தவுடன் எல்லாம் முடிந்துவிட்டது என்பார்கள். மறுபிறப்பை ஒப்புக் கொள்ளுவ தில்லை. இவர்கள் நாத்திகர்கள். ஆன்மா மாறி மாறிக் கன்மங்களுக்கு ஏற்பப் பிறக்கின்றன. புண்ணியம் செய்தவன் சுவர்க்கலோகங்களை

யடைகின்ருன். தனவந்தன் கோடைக் காலத்தில் குளிர்ப்பிரதே சங்களை அடைவதுபோல் என்று அறி. கள்வன் சிறைச்சாலையடைவது போல் பாவஞ் செய்தவன் இருள் உலகமாகிய நரகஞ் சேர்கின்ருன்.

நரகம்

தென் திசையில் யமனுடைய சம்யமனி பட்டினத்தில் இயமனு டைய மாளிகை மிகப் பெரியதாக இருக்கின்றது. அங்கே பித்ரு தேவதைகளும், பிரேதர்களும் (ஒரு வகைப் பேய்) பேய்களும் நிரம்பி யிருக்கின்ருர்கள். உயிர்களின் நல்வினை தீவினைகளை தருமராஜன் அறிகின்ருன். அவன் கையில் பாசம் இருக்கின்றது.

உயிர்களின் வினை முடிவில் யமதூதர்கள் நோய் முதலிய காரணத்தை அமைத்துப் பிடித்துப் போகின்ருர்கள். இறப்பவர் களுக்கு மூன்று வகையான வழிகள் இருக்கின்றன. ரமணீயம், நிராபாதம், துர்த்தர்சம் என்பவை. புண்ணியசாலிகளை ரமணீயம் என்ற வழியில் அழைத்துப் போவார்கள். அது செடிகள் மரங்களின் நிழலுடன் குளிர்ந்திருக்கும். நீர் தெளித்துத் தூபதீபங்களுடன் பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்டு இனியகாற்றுடன் விளங்கும்.

நிராபாதம் என்றவழி ஒளியுடன் நன்ருகவேயிருக்கும். மூன்ருவ தான துர்த்தர்சம் என்ற வழி, துர்க்கந்தத்துடன் இருள் மூடி கற்களும் நாயின் பற்களும் நிரம்பிக் கரடு முரடாகப் பூச்சி புழுக் களுடன் இருக்கும். போகின்றவர்கட்கு நடக்க மிகச் சிரமமாக இருக்கும். உத்தம மத்திம அதமர்கள் இந்த மூன்று வழிகளில் யம தூதர்களால் கொண்டு போகப்படுகின்ருர்கள்.

உத்தமர்களை யமதூதர்கள் சிறந்த உடுப்புடன் வந்து சுகமாக அழைத்துப்போவார்கள்.போகவசியம் கர்மவசியம் துக்கவசியம் என்ற மூன்று காரண தேகங்கள் உண்டு. போகவசியம் தேவலோகத்திற்கு உரியது. கர்மவசியம் மனித உலகிற்கு உரியது. துக்கவசியம் நரக உலகிற்கு உரியது. இதனை யாதனு சரீரம் என்றும் கூறுவர்.

மத்திமர்களைப் போர்ச் சேவகனுடைய வடிவுடன் வந்து யம தூதர்கள் நிராபாத வழியில் அழைத்துப் போவார்கள். அதமர்களைச் சண்டாள வடிவில் யமதூதர்கள் வந்து, பாசத்தால் கட்டி இறுக்கி அடித்து நொறுக்கித் துன்புறுத்தி இழுத்து துர்த்தர்சம் என்ற வழி யில் செல்லுவார்கள்.

மந்திரிகளுடன் தர்மபீடத்தில் ஒளியுடன் வீற்றிருக்கின்ற தரும ராஜனிடம் அவர்களைக் காட்டித் தெரிவிப்பார்கள். அறக்கடவுள் புண்ணியசீலர்களைப் பூஜித்து உபசரிப்பான்.அவர்கட்கு நல்வரவு கூறி

மேலுலகங்கட்கு விமானங்களில் அனுப்புவான். மத்திமர்களை மனித வுலகில் மானுடர்களாகப் பிறக்கச் செய்கின்ருன். அதமர்களை யமன் பார்ப்பதேயில்லை. யமனுடைய கட்டளையினுல், பாவிகளைக் குத்தியும் வெட்டியும் இங்கும் அங்கும் இழுத்தும், ஒருவரோடு ஒருவரை மோதியும் நரகக் குழியில் குப்புறத் தள்ளுகின்ருர்கள். சம்யாமினிகள் என்ற பாறைகள் அவர்கள் தலைகளில் விழுகின்றன. இரும்பு முகமுள்ள கொடிய கழுகுக்கூட்டங்கள் அவர்களைக் கடித்து உண்ணுகின்றன. பாவிகளான அவர்களில் சிலரை அசிபத்திரம் என்ற இரும்பு முள் உள்ள வனத்தில் நடக்க வைப்பார்கள். கூரான பற்கள் உள்ள நாய்கள் சிலரைக் கடிக்கின்றன.

அங்கே மூத்திரமும் உதிரமும் வெள்ளமாக ஓடும் வைதரணீ என்ற நதியுள்ளது. அதில் முதலைகள் நிரம்பியிருக்கும். அருவருப்பும் நாற்றமும் நிறைந்த அந்த அந்நதியில் அவர்களை முழுக்காட்டி அந்த அசுத்த நீரைக் குடிக்கச் செய்வார்கள். சிலரை முள் இலை மரங் களில் ஏற்றுகின்றனர். சிலரை செக்கிலிட்டு எண்ணெய்போல் அரைப்பார்கள். சிலரை வறுக்கின்ற மணலில் சொருகுவார்கள், சிலரை குடத்திலிட்டு மூடி வேகவைப்பார்கள். சிலரை வாள் முதலிய ஆயுதங்களால் அறுப்பார்கள்; வெட்டுவார்கள். ஊசியாலும் சூலத்தாலும் குத்துவார்கள். "நீ இன்ன பாவஞ் செய்தாய், அதற்கு இது தண்டனை" என்று யமதூதர்கள் சொல்லி கர்ஜனை புரிவார்கள். யாதனுவசியம் என்ற உடம்புடன் அவர்கள் துன்பத்தை யனுபவிப் பார்கள். கதறியும் அழுதும் துன்புறுவார்கள், தாங்கள் செய்த பாவத்தை நினைத்துப் பரிதவிப்பார்கள். அவர்களைத் தப்பவிடாமல் யமதூதர்கள் தண்டிப்பார்கள். பிறகு பாவம் நீங்கி விலங்குகளாக வும் மனிதர்களில் வறியவர்களாகவும் அங்கஈனர்களாகவும் நோய் வாய்ப்பட்டவர்களாகவும் பிறக்கின்ருர்கள்.

நரகம் ஐந்து வகைப்படும். அவை தீவினை செய்தவர்களுக்காக உண்டாக்கப்பட்டவை. கொடியவை. அவற்றுள் முதலாவது ரௌரவம் என்னும் நரகம். அது நூறு யோசனை அகல நீளமுடை யது; இருள் மூடியது; நாற்றமுடையது; பயங்கரமான புழுக்கள் நிரம்பியது. பாவிகள் அங்கு புழுபூச்சிகளினுல் கடிக்கப்பட்டு வெகு காலம் நிற்பார்கள். படுக்கமுடியாது. உட்கார முடியாது. கால மெல்லாம் நடுங்கிக்கொண்டே நிற்பார்கள். யமதூதர்காளல் துன் புறுத்தப்படுகின்ருர்கள்.

(தொடரும்)

முருகா

கந்தபுராண விரிவுரை

காங்கேயநல்லூரில் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருள் பந்தரில் 7-11-72 செவ்வாய்க்கிழமை முதல் 13-11-72 திங்கட்கிழமை முடிய நாள்தோறும் இரவு 8-30 மணி முதல்

திருமுருக கிருபானந்த சுவாமிகள்

அவர்கள் இளவல்

திரு திருப்புகழ்மணி அவர்களால்

கந்தபுராண இன்னிசை விரிவுரை நடைபெறும்.

1. 7-11-72 முருகப் பெருமான் திருவவதாரம்.
2. 8-11-72 சிவோபதேசம்.
3. 9-11-72 தாரகன் வதை.
4. 10-11-72 வீரபாகுதேவர் தூது
5. 11-11-62 சிங்கமுகாசுரன்வதை.
6. 12-11-72 சூரபன்மன் பெருவாழ்வு.
7. 13-11-72 தெய்வயானையம்மையார் திருமணம்.

திருப்புகழமிர்தம் : போன் : 22622 போன்: 20278

Registered with the Registrar of Newspapers
for India under No. R. N. 1109/57.

Edited by Sri. KIRUPANANDAVARI & Published by M. Madusoodana Sivam, 89, Singanna Chetty Street, Madras-2. Printed by K. M. John at Jeevan Press, 8, Titarappa Mudali St., Triplicane, Madras-5.